# flex அருள்

செப்டம்பர் 2011 கடவுளை வணங்குவோம் கருணையை பெறுவோம்

ஆன்மீகம் மணக்கும் மாத இதழ்

www.flexguidemag.com



இலவச இதழ்


முகூர்த்தப் புடவைக்கு ராசியான இடம்...



JEYECHANDRANS
The Art of Fashion

No. 433, Galle Road, Wellawatte, Colombo 06.
Tel: 011 4528438 / 5 Fax: 011 2362822
Email: info@jeyechandrans.com Web: www.jeyechandrans.com


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# Brintha

Herbal Beauty Care Centre

www.brintha.com

No. 62/16, Galle Road,
(Opposite Bank of Ceylon)
Wellawatte,
Colombo 06.




**Mob: +94 776 331257. Office: 2593693,2553028**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்...
ஆன்மீகம் மணக்கும் மாத இதழ்

இதழ் 10


**09-14** நவராத்திரி



**15-26** சாஸ்திரங்களும், சம்பிரதாயங்களும்



**29-60** அற்புத ஆலயங்கள்



**62** சத்தியவான்-சாவித்திரி



**05** எமது நோக்கம்

**06-07** சைவ வழிபாட்டு முறையியல்

**63-65** பஞ்சாங்கம்

**69-72** ராசி பலன்கள்

**72** ஆகஸ்ட் மாதத்திற்கான விரதங்கள்

**74-79** பக்தி கதைகள்

**78** சகலகலாவல்லிமாலை

**83** கொழும்பிலுள்ள ஆலய முகவரிகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PRASANNA

MONEY EXCHANGE (PVT) LTD

MONEY CHANGER
PERMIT NO. IN/AUT/MC/ 58 A



No, 57, Galle Road, Colombo 06. | Tel: 2591420 | 2591421
Fax: 2504108 | Email: prasannaexchange@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது நோக்கம்

வாழ்வின் உண்மை என்ன? பிறப்பிற்கு முன்னும் இறப்பிற்குப் பின்னும் நமது நிலை என்ன? வாழ்வின் காலத்தை எவ்வாறு அறிவின் விரிந்த நிலையில் கணித்துப்பார்க்கலாம். அறிவை விரிவாக்கிக் கொள்வோம். உண்மை உணர்வு ஏற்படுகின்றது. இவ்வுலகம் ஒரு சத்திரம் போன்றது. பிறக்கும் ஒவ்வொருவரும் உலகம் என்ற சத்திரத்தில் தங்குகிறோம். நாம் குடிபுகும் அறையில் முன்னமே சிலர் இருந்தார்கள். பிறகும் சிலர் வந்து சேர்கிறார்கள். இதுவே குடும்பம். அவரவர்கள் தங்கவேண்டிய காலம் முடிந்தவுடன் புறப்பட்டு இயற்கையோடு கலந்து விடுகிறார்கள். வாழும்போது உடன் வாழ்பவர்களின் நட்பு ஏற்படுகிறது. அது முன்னும் இல்லை பின்னும் இல்லை.

ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒருவருக்கொருவர் உதவிக் கொள்ள இந்த நட்பும் பயனாகிறது. வாழத் தெரிந்தவர்கள் இந்த நட்பை வளர்த்துக் கொள்கிறார்கள், இன்பமடைகிறார்கள் வாழத் தெரியாதவர்கள் நட்பைக் குழைத்துத் துன்பத்தைப் பெருக்கிக் கொள்கிறார்கள். மேலும் ஒரு உண்மையை உணர்வோம். பேருலகம் என்ற சத்திரத்தில் வரும் போது எவரும் ஏதும் கொண்டு வருவதில்லை. அதிலிருந்து புறப்பட்டுப் போகும்போது ஏதும் கொண்டு போவதில்லை மக்கள் பற்று, குடும்பப்பற்று எங்கே? சொத்துப் பற்றோ, பொருட்களைத் தனது என்று உரிமை பாராட்டுகின்றோம். இருக்கட்டும் உடல் சீரணிக்கும் அளவுக்குமேல் உணவை உட்கொள்ள முடியுமா? சுமக்கும் அளவுக்கு மேல் ஆடை உடுத்த முடியுமா? இவ்வுண்மைகளை விளங்கிக் கொண்டு அடிக்கடி நினைத்து, நினைத்து அறிவில் அழுத்தமாகப் பதிவுகொண்டு குடும்பத்தில் அவரவர்கள் கடமைகளை ஆற்றினால் எந்தச் சிக்கலையும் எளிதில் தீர்க்கும் கூர்மையும் அறிவுக்கு எப்போதும் இருக்கும். நிறைவும், அமைதியும் இந்த நிலையில் தான் கிடைக்கும்.

மனிதனின் துன்பமெல்லாம் அவனுடைய குறையெல்லாம் இயற்கையை அறியாமலும், அல்லது அறிந்தும் அதனை மதியாமலும் அவன் நடந்து கொள்வதிலேயே தோன்றுகின்றன. இந் நிலையைத் தான் ஆணவம் என்பார்கள். இயற்கையை எவ்வளவுக் கெவ்வளவு நாம் அறிந்து கொள்கிறோமோ அவ்வளவுக்குத் தான் நம் மனம் விரிவும், திண்மையும் பெறும். மனதின் திண்மைக்கு ஏற்பவே செயல் திறம் அமையும். செயல் திறமைக்கு ஏற்ப வாழ்க்கையானது வெற்றியும் மகிழ்ச்சியும் நிறைந்ததாக அமையும்.

- ஆசிரியர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ வழிபாட்டு முறையியல்

S.B. சந்திரன்

## இந்து சமயமா? சைவ சமயமா?



கண்ணாடி - மனிதன் கண்ணாடியாய் இருத்தல் வேண்டும். கண்+நாடி, நாடி அளத்தல்:- நம்மை அழகுப்படுத்த கண்ணாடியைப் பயன் படுத்துகின்றோம். அதேபோல் நீ கண்ணாடியாயிருந்தால் பிறர் கண் உன்னை அளந்து சமுதாயத்தில் நீயொரு பெரும் மனிதனாய் இருந்து உன்னைப்போல் மற்றவரும் வாழ வாழ்வாயாக என்பதே கண்ணாடியின் தத்துவம். குடை:- இது மனிதா! நீ! நிழலாக வாழ்! மழைக்கும், வெயிலுக்கும் குடை உதவுவது போல் நீயும் குடையாக இருந்து பயன் செய்வாயாக! என்பதே குடையின் தத்தவம்.

சாமரம்:- (வெண்சாமரை) ஓர் முடியிழந்தாலும் உயிர் வாழாக் கவரிமான். "மயிர் நீப்பின் வாழாக்கவரி தன்னார் உயிர் நீப்பர்மானம் வரின்" எனும் திருக்குறளின் பொய்யா மொழிக்கொப்ப இன்பம் வரினும், துன்பம் வரினும் மானத்தோடு வாழ் மனிதா! எனும் தத்துவம் சாமரையின் தத்துவம்.

ஆலவட்டம்:- இதன் தத்துவம் திருவிழாக் காலத்தில் சுவாமியின் முன்னும் அரசர்களின் ராஜ பவனியிலும் ஆலவட்டம் முதலிடம் பெறும். அதுபோல் மனிதா நீ பூமியில் தோன்றிப் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலின் தோன்றாமை நன்று. என்ற வள்ளுவர் வாய்மொழிப்போல் எந்தச்சபையிலும் நீ ஒரு புனிதமானவன் பெருமனிதன் என மற்றவர்கணித்து உவகையுற வாழ் எனும் தத்துவம் ஆலவட்டத்தின் தத்துவம்.

விசிறி:- இதன் தத்துவம் சில மனிதர்கள் அற்ப சுகத்திற்காக அடங்கியொடுங்கி விசிறியாக வாழ்வர் அல்லது உண்மைகளை புரிந்துகொள்ளாமலும் விசிறியாக வாழ்வர். மனிதா! நீ! விசிறியாக வாழ்ந்தால் கண்ணாடியாக இருக்கமாட்டாய் குடையாக இருக்கமாட்டாய். (சாமரம்) ஆலவட்டமாய் இருக்கமாட்டாய் என்று மனிதனுக்கு அறிவுறுத்தும் பான்மையே விசிறியின் தத்துவம்.

கொடி:- இது ஆலவட்டத்தை போன்று பிரதானமானது. கொடி எல்லா வகையிலும் மதிக்கப்படும் பொருள் இறைவனின் கொடி ஒரு நாட்டின் தேசியக்கொடி என பலவகைப்படும். இதன் அடிப்படையில் மனிதன் கொடியோடும் முடியோடும் வாழவேண்டும். கொடிப்போலவும் வாழவேண்டும். என்பதே கொடியின் தத்துவம்.

பன்னீர்:- நறுமணம் மிகுந்ததும் எல்லோராலும் விரும்பக்கூடிய பொருள் பன்னீர் போன்று மனிதன் எல்லோராலும் பண்புடையவன் என்று மதிக்கப்படுகின்ற ஒருவனாக நீ வாழ். என்பதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னீரின் தத்துவம். அதன் பின்பு இறைவனின் நாமங்களை கூறி அர்ச்சனை நடைபெரும். அர்ச்சனையின் பின்பு பஞ்சாலார்த்தி காட்டப்படும். இதன் தத்துவம் பாவங்கள் எரிக்கப்பட்டு ஞானச்சுடராக இறைவன் காட்சிதர அதில் ஆன்மாக்கள் ஆனந்தமனோலயம் அடைதல். இதன் பின் ஸ்தோத்திரம் திருமுறை பிரார்த்தனை நடைபெற்று சண்டேஸ்வரப் பூஜை நிறைவேறும்.

சண்டேஸ்வரப்பூஜையில் இரு தத்துவங்கள் உள்ளடங்குகின்றன. ஒன்று சண்டேஸ்வரர் மகாஞானி இறைவனின் கருணையில் தோய்ந்து அப்படியே ஆனந்த வயப் பட்டிருப்பவர் இறைவனாலேயே கொன்றை மாலை தனக்குவைக்கப்பட்ட பிரசாதம் ஆகியவற்றை இறைவனே கொடுத்து தன்னருள்ஜோதியில் ஐக்கியப்படுத்திக் கொண்டவர். எமது வேண்டுதல்களை மனமுவர்ந்து ஏற்று அதை இறைவனிடத்தில் சமர்ப்பிக்கின்ற மெஞ்ஞானி ஊனக் கண்ணை மூடி ஞானக்கண்ணால் எம்மை எல்லாம் பார்த்துக் கொண்ருப்பவர். பூஜைகள் நிறைவேறிய பின்பு இவரிடத்தில் சென்று பிரார்த்தனை முழுமையாகச் செய்தால்தான் பூஜையின் முழு பயனையும் பெறலாம்.

"சண்டனை அர்ச்சித்தவரே சம்புவை அர்ச்சித்த பயன் கொண்டிடுவர் மற்றையர் கொள்ளார்" எனும் சைவசமய நெறியின் பொன் மொழிக்கொப்ப சண்டேஸ்வரப்பூஜையே ஆலயத்தின் பிரார்த்தனை பூஜையின் பூஜையாகும். சண்டேஸ்வரப்பூஜையில் கைதட்டுவது சண்டேஸ்வரரே. ஆலயத்துள் வரும்போது வெறுங்கையோடு வந்தேன். ஆனால் நம்பிக்கையோடு வந்தேன். ஆலயத்தை விட்டு இப்போது நான் போகும்போது வெறுங்கையுடன் போகின்றேன். ஆனால் உன் அருட்கருணை விண்ணப்பத்தால் எனக்கு முழுமையான பலன்கிடைக்கும் என நம்பிக்கையோடு போகிறேன் என்பதே கைதட்டுவதின் முழுப்பொருள் தத்துவம். மணி அடிப்பதன் தத்துவம் வேறு, சண்டேஸ்வரரின் தத்துவம் வேறு. மணிகளில் காண்டாமணி, பூஜைமணி, கொத்துமணி என பலவகைப்படும். இதில் காண்டாமணி ஆலயத்துள் நாத சக்தியாக பெருந்தூண் கட்டி அதில் காண்டாமணியை ஏற்றி இருப்பார்கள். இதன் ஓசை ஓங்கார ஒலியாகும். இதனுடைய ஒலியினைக் கேட்டு மக்கள் தெய்வீக விழிப்படைவர். அசுரசக்தி மனதிலிருந்து அகலவும் தெய்வீக சக்தி மனதில் எழவும் காண்டாமணியின் ஓசை பயன் செய்கின்றது. ஆலயத்துள் பூஜையின் போது பயன்படுத்தும் பூஜை மணி மந்திரங்களால் பூஜை செய்யப்பட்டு அடிக்கப்படும். இதன் ஒலியால் ஆலயத்துள் அசுரசக்தி விலகி தேவர்களை பூஜைக்கு வருக என்று அழைக்கும் பாங்குடையது. இதுவே பூஜைமணியின் தத்துவம். பூஜைகள்யாவும் நிறைவேறிய பின்பு ஆலய : சிவாச்சாரியார் முதலில் ஆன்மீக ஈடேற்றத்திற்கு உகந்த நற்சிந்தனைகளை உரைத்து எல்லோரையும் ஒருமுகமாக பிரார்த்தனைக்கு லயப்படுத்திப் பின்பு சிவாச்சாரியார் பூஜையில் வைக்கப்பட்ட அருட்பிரசாதமாக விபூதியை வழங்குவார்.

**தொடரும்...**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SPECIAL OFFER

- Maximum 30HD
- 17 Tamil Channels
- Total 230 Channels
- Digital Sound Systems
- Crystal Clear
- Picture Quality



Sun Direct வாடிக்கையாளர்கள் விளம்பரங்கள் இல்லாமல் திரைப்படங்களை கண்டு களிக்க Tamil Cinema Club உடனடியாக Activate செய்து தரப்படும்

**DISH TV RECHARGE OFFER**

**PLATINUM - 1150/=**
**GOLD - 750/=**
**SILVER CRICKET - 500/=**




INSTANT
RECHARGE
WITHIN 10 MINITES

***DISH TV. SUN DIRECT***
***VIDEO COM, AIRTEL, BIG TV***

Dish, Receiver Repairing & Installation

# ABBI TECH SYSTEM

No: 7,1/20, Orchard Shopping Complex, Wellawatte.
Tel: 011 7919899 / 077 9000857
E-mail: abbitec@yahoo.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மனிதனுக்கு உடல்வலிமை, பராக்கிரமம், மனோதிடம், புத்திபலம், தீர்க்காயுள், ஞானம், தேவைகளிற்கு பணம் போன்ற அனைத்து அம்சமும் நிறைந்திருந்தால் தான் அவன் சிறந்த வெற்றியாளனாக திகழ முடியும். அதாவது வீரம், செல்வம், கல்வி ஆகியவை அனைத்தும் நிறைந்திருக்க வேண்டும். இவற்றை பெறுவதற்காகவே நவராத்திரி விரதம் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. வாழ்க்கையின் எல்லா தேவைகளையும்

ஓன்பது ராத்திரிகள் சக்தியை நோன்பு நோற்று வழிபட்டு 10ம் நாள் நோன்பை நிறைவு செய்ய வேண்டும். உத்தராயண காலமான தை முதல் ஆனி வரையிலான காலத்தின் நடுவில் வருவது வசந்த ருது. சித்திரை தட்சிணாயண காலமான ஆடி முதல் மார்கழி வரையிலான காலத்தின் நடுப்பகுதியான சரத் ருது புரட்டாசி. இவ்விரு பருவ காலங்களும் எமனின் கொரைப்பற்களை குறிக்கின்றன.



அடைய பணம் வேண்டும். இதற்காக மகாலட்சுமி தேவியை வணங்குகிறோம். பெற்ற பணத்தை பாதுகாக்க வீரம் வேண்டும் அதற்காக துர்கா தேவியை வழிபடுகிறோம். பெற்று பாதுகாக்கப்பட்ட பணத்தை நல்வழியில் பயனுள்ள காரியங்களுக்கு பயன்படுத்த அறிவு அதாவது கல்வியறிவு வேண்டும். அதற்காக சரஸ்வதி தாயை வணங்குகிறோம். இப்படியாக காரண காரியங்களுடன் இந்த விரத முறை அமைந்துள்ளது.

நவ என்ற சொல்லிற்கு ஒன்பது, புதியது என்ற இரண்டு அர்த்தங்கள் உள்ளன. இங்கு ஒன்பது ராத்திரிகள் என்பதே நவராத்திரி எனப்படுகிறது.

இக்காலங்கள் பொதுவாக மனிதரிற்கு தீமை விளைவிக்கும் காலங்களாகும். இதனால் தான் இக் காலங்களில் திருமணம் போன்ற சுப காரியங்கள் நடத்தப்படுவதில்லை. இந்த ஒன்பது நாட்களும் முப்பெரும் தேவியரான மலைமகள் (துர்க்கை), அலைமகள் (மகாலட்சுமி), கலைமகள் (சரஸ்வதி), ஆகியோரிற்கு மும்மூன்று நாட்களாக வழிபடும் ஒரு முறையும் உள்ளது. மற்றும் ஒன்பது சக்தியினரை ஒன்பது நாட்கள் வழிபடும் முறையும் உள்ளது.

பண்டைய காலத்தில் மன்னர்கள் மற்றும் படைவீரர்கள் ஒன்பது நாட்களும் தங்கள் ஆயுதங்களை (போர்க்கருவிகளை) பூசையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்து பத்தாம் நாள் விஜய தசமியன்று விழா எடுத்து தமது வெற்றிக்கு தமது ஆயுதங்களிற்கு சிறப்பு சக்தி கிடைக்க வேண்டும் என வழிபட்டு வந்தனர். இதற்கு சான்று கிருஷ்ண அவதாரத்தில் கம்சனின் படலத்தில் காணப்படுகிறது. நவராத்திரி கொலு வைக்கும் முறையையும் நவராத்திரி என்பது பெண் தெய்வங்களிற்கு மட்டுமே உரிய ஒரு வழிபாட்டு முறை போலவும், அது பெண்கள் மட்டுமே கடைபிடிக்கும் ஒரு விரத வழிபாட்டு முறை போலவும் ஒரு தவறான தோற்றம் உருவாக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த நவராத்திரி விரதம் குறிப்பாக வெற்றிக்கனியை பறிக்க விரும்பும் ஆண், பெண், குழந்தைகள் அனைவரும் கடைப்பிடிக்க வேண்டிய விரதமாகும்.

ஆண்கள் இந்த விரதத்தினை அனுஷ்டிப்பதற்கு சான்றாக ஏற்கனவே கூறியது போல கம்சன் சிறப்பாக ஆயுத பூசை செய்ததையும் தற்காலத்தில் தொழிலாளர்கள் தங்கள் ஆயுதங்களுக்கு ஆயுத பூஜை அன்று சிறப்பு வழிபாடு செய்வதையும் காணலாம். மற்றும் விஜயதசமி அன்று பிள்ளைகளுக்கு ஏடு தொடங்கல் என்ற கல்வியின் ஆரம்ப நாளாக கடைப் பிடிப்பதையும் நாம் காணலாம்.

ஒன்பது தேவியரின் வழிபாட்டு முறையையும் இனிப்பார்ப்போம்.

## நவராத்திரி கொலு




# அதிர்ஷ்ட நியூமராலஜி நீங்களும் அதிர்ஷ்டசாலியாகலாம்



எல்லோரும் மனிதர்களே! எல்லோரும் எல்லாம் பெற வேண்டும். உழைப்பவர் அனைவரும் வெற்றி பெறுவதில்லை. ஏனெனில் வெற்றிக்கு அதிர்ஷ்டம் தேவை. வாழ்வில் அதிர்ஷ்டசாலியாவதற்கு ஆசைப்படாதவர்கள் எவரும் இல்லை. அதிர்ஷ்டம். இது யாருக்கும் சொந்தமில்லை. உலகத்திலுள்ள அனைத்து மக்களுக்கும் சொந்தமானது. இதை எல்லோரும் பயன்படுத்தி வெற்றியுடனும். அதிர்ஷ்டத்துடனும் பெருவாழ்வு வாழலாம். அதிர்ஷ்டம் தரும் அதிநவீன அதிர்ஷ்ட நியூமராலஜி எண் கணிதத்தில் 52 வருடங்களுக்கும் மேல் ஆராய்ச்சி மூலம் அனுபவம் பெற்றவர். பிரபல இலங்கை. இந்திய. அரசியல்வாதிகள். தொழிலதிபர்கள். தென்னிந்திய சினிமா நட்சத்திரங்கள். வியாபாரிகள். மற்றும் பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு அதிர்ஷ்டமாக வாழ அதிர்ஷ்டக் குறிப்புகள் அமைத்துக் கொடுத்தவர். எந்த வயதிலும் செல்வம். வியாபாரம். அதிர்ஷ்டமான பெயரமைப்பு. அதிர்ஷ்டமான கையொப்பம். கல்வி. தொழில். வியாபாரம். அதிர்ஷ்டமான தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டால்தான் வெற்றி உண்டாகும். நீங்கள் உங்களுக்கு ஏற்ற தொழில். வியாபாரத்தில் ஈடுபடும் போதுதான் ஊக்கமும். தன்னம்பிக்கையும். ஆர்வமும். மனமகிழ்ச்சியும் உண்டாகும். பணம் சம்பாதிக்க வேண்டும் என்பதற்காக அதிர்ஷ்டமும். பொருத்தமுமில்லாத தொழில். வியாபரத்தில் ஈடுபட்டால் வெற்றி கிட்டாது. எனவே உங்களுக்கு அதிர்ஷ்டமுள்ள பொருத்தமான தொழில். வியாபாரம். கூட்டு வியாபாரம். பங்காளிகள். உங்களின் அதிர்ஷ்ட வியாபாரத்திற்குறிய அதிர்ஷ்டமான பெயர்கள். நிறங்கள் மற்றும் தொழில் சம்பந்தமான எல்லா விபரங்களுடனும். காதல். காதல் பிரச்சினைகள். பொருத்தமான அதிர்ஷ்டத் திருமணம். திருமணத்தடை. திருமணமானவர்களின் பிரச்சினைகள். பெண்களுக்கு ஏற்படும் எல்லாவிதமான பிரச்சினைகள். குழந்தைச் செல்வம். உங்கள் அதிர்ஷ்டமான இரத்தினக் கற்களின் விபரங்கள். இரத்தினக்கற்கள் மனித வாழ்வை மாற்ற வல்லமை கொண்டவை. உங்களிற்கு ஏற்படும் தீமைகளில் இருந்தும். கண் திருஷ்டி. சூனியம். நோய்கள் போன்றவற்றிலிருந்தும் உங்களை தற்காத்துக் கொள்ள அதிர்ஷ்ட நியூமராலஜி விஞ்ஞான முறையினூடாக அதிர்ஷ்ட இரத்தினக்கல் மோதிரங்கள். அழகுக்குறிப்புகள். இயற்கை வைத்திய விபரங்கள் மற்றும் எல்லா விதமான பிரச்சினைகளுக்கும் தீர்வு பெற்று நிரந்தரமாக என்றென்றும் நீங்களும் அதிர்ஷ்டமுடன் பெருவாழ்வு வாழலாம். நீங்களும் அதிர்ஷ்டமுடன் வாழ முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள். விபரங்களுக்கு நேரில். தொலைபேசி மூலமாகவும் தொடர்பு கொள்ளுங்கள். தபால் மூல சேவையும் உண்டு. இரகசியம் பேணப்படும். **உலகப்புகழ்பெற்ற அதிநவீன மனோதத்துவ நியூமராலஜி நிபுணர், மாமேதை:**



**தேசபந்து, தேசகீர்த்தி, மன்பஹா, மௌலானா,** Deshabandhu, Deshakeerthi, Manbaha, Moulana

**டாக்டர். ரசூல் மன்சூர் J.P. | DR. RAZUL MANZURR J.P.**

NO. 198/2A, FIRST FLOOR, HILL STREET, DEHIWELA, SRI LANKA.
Mobile: 071-4136254, 077-2037871, 078-5118019, Tel: (011) 3172645, (011) 3042406. Tele/Fax: (011) 2724666 Email: razulmanzurr@yahoo.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவராத்திரியின் சிறப்பு அம்சம் கொலு வைப்பதேயாகும். கொலு என்பது பல படிகளை கொண்ட மேடையில் பலவித பொம்மைகளை நேர்த்தியாக அலங்கரித்து வைப்பதேயாகும். ஐம்பூதங்களில் ஒன்றான மண்ணினால் செய்யப்பட்ட பொம்மைகளை சக்தியின் அம்சங்களாக எண்ணி நவராத்திரியில் பூசிப்பவர்களிற்கு சகல நலன்களையும் தருவேன் என்று அம்பிகையே கூறியிருக்கின்றாள். இனி நவராத்திரி கொலு எப்படி அமைக்கவேண்டும் என்று பார்ப்போம். கொலுமேடை 9 படிகளை கொண்டதாக இருக்கவேண்டும்.

முதலாம் படி: ஓரறிவு உயிர்கள் புல், செடி, கொடி போன்ற தாவர வர்க்கங்களின் பொம்மைகள்

இரண்டாம் படி: ஈரறிவு கொண்ட நத்தை, சங்கு போன்ற பொம்மைகள்.

மூன்றாம் படி: மூன்றறிவு உயிர்களான கறையான், எறும்பு போன்றவற்றின் பொம்மைகள்.

நாலாம் படி: நான்கறிவு உயிர்களை விளக்கும் நண்டு, வண்டு போன்றவற்றின் பொம்மைகள்.

ஐந்தாம் படி: ஐந்தறிவு உள்ள மிருகங்கள், பறவைகள் ஆகியவற்றின் பொம்மைகள்

ஆறாம் படி: ஆறறிவு மனிதர்கள் பொம்மைகள்

ஏழாம் படி: மனித நிலையிலிருந்து உயர் நிலையை அடைந்த சித்தர்கள், ரிஷிகள், மகரிஷிகள்(ரமணர், வள்ளலார்) போன்றோரின் பொம்மைகள்.

எட்டாம் படி: தேவர்கள், அட்டதிக்குப் பாலகர்கள், நவக்கிரக அதிபதிகள் போன்ற தெய்வங்கள், தேவதைகள் போன்றோரின் பொம்மைகள்.

ஒன்பதாம் படி: பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகியோர் அவர்களின் தேவியருடன் நடுநாயகமாக ஆதிசக்தி வைக்கவேண்டும்.

மனிதன் படிப்படியாக உயர்ந்து தெய்வ நிலையை அடைய வேண்டும் என்பதற்காகவே இப்படி கொலு அமைப்பது வழக்கம்.



# நவராத்திரி வழிபாட்டு முறை

முதலாம் நாள்:
சக்தித்தாயை முதல்நாளில் சாமுண்டியாக கருதி வழிபடவேண்டும். தெத்துப்பல் திருவாயும், முண்டமாலையும் அணிந்தவள். முண்டன் என்ற அசுரனை சம்ஹாரம் செய்த சக்தி அவள். இதனால் சாமுண்டா எனவும் அழைப்பர். இவள் மிகவும் கோபக்காரி. நீதியைக்காக்கவே இவள் கோபமாக



உள்ளாள். முற்றும் தவறு செய்தவர்களை திருத்தி நல்வழிபடுத்தவே ஆகும். முதல்நாள் நைவேத்தியம்: சர்க்கரைப் பொங்கல்.

இரண்டாம் நாள்:
இரண்டாம் நாளில் அன்னையை வராஹி தேவியாக கருதி வழிபடவேண்டும். வராஹ(பன்றி) முகமும் தெத்துப்பற்களும் உடையவள். சூலமும் உலக்கையும் ஆயுதங்கள் ஆகும். பெரிய சக்கரத்தை தாங்கியிருப்பவள். தனது தெத்து பற்களால் பூமியை தூக்கியிருப்பவள். இவளுக்கு மங்கள மய நாராயணி, தண்டினி பகளாமுகி போன்ற திருநாமங்கள் உண்டு. இவள் அன்னையின் சேனாதிபதி ஆவாள். ஏவல், பில்லி, சூனியம், எதிரிகள் தொல்லையிலிருந்து விடுபட இவளின் அருளை பெறுவது அவசியம். குடும்ப பாரத்தை கணவனுடன் சேர்ந்து மனைவியும் சுமக்க வேண்டும் என்ற தத்துவத்தினை வலியுறுத்துவதாக நாம் கருதலாம். இரண்டாம் நாள் நைவேத்தியம்: தயிர்சாதம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாம் நாள்:
மூன்றாம் நாளில் சக்தித்தாயை இந்திராணியாக வழிபடவேண்டும். இவளை மஹேந்திரி, சாம்ராஜ தாயினி என்றும் அழைப்பர். இவள் இந்திரனின் சக்தி ஆவாள். கிரீடம் தரித்து வஜ்ராயுதம் ஏந்தியவள். ஆயிரம் கண்ணுடையவள். யானை வாகனம் கொண்டவள். விருத்திராசுரனை அழித்தவள். தேவலோகத்தை பரிபாலனம் செய்பவளும் இவளேயாகும். பெரிய பெரிய பதவிகளை அடைய விரும்புபவர்களுக்கு இவளின் அருட்பார்வை வேண்டும். மற்றும் வேலையில்லதவர்க்கு வேலை கிடைக்க, பதவியில் உள்ளவருக்கு பதவியுயர்வு, சம்பள உயர்வு, கிடைக்க அருள் புரிபவளும் இவளேயாகும். மூன்றாம் நாள் நைவேத்தியம்: வெண்பொங்கல்.

நான்காம் நாள்:
சக்தித்தாயை இன்று வைஷ்ணவி தேவியாக வழிபடவேண்டும். சங்கு, சக்கரம், கதை, வில் ஆகியவற்றை கொண்டிருப்பவள். தீயவற்றை சம்ஹரிப்பவள். இவளின் வாகனம் கருடன். நானகாம் நாள் நைவேத்தியம்: எலுமிச்சை சாதம்.

ஐந்தாம் நாள்:
ஐந்தாம் நாளில் அன்னையை மகேஸ்வரி தேவியாக வழிபடவேண்டும். அன்னை மகேஸ்வரனின் சக்தியாவாள். திரிசூலம், பிறைசந்திரன், பாம்பு தரித்து இடப வாகனத்தில் எழுந்தருளியிருப்பவள். அளக்கமுடியாத பெரும் சரீரம் உடையவள் சர்வ மங்களம் தருபவள். தர்மத்தின் திருவுருவம். கடின உழைப்பாளிகள் உழைப்பின் முழுப்பலனை பெற அன்னையின் அருள் அவசியம் வேண்டும். ஐந்தாம் நாள் நைவேத்தியம்: புளியோதரை.



ஆறாம் நாள்:
இன்று அன்னையை கவுமாரி தேவியாக வழிபடவேண்டும். மயில் வாகனமும் சேவல் கொடியும் உடையவள். தேவசேனாதிபதியான முருகனின் வீரத்திற்கு ஆதாரமானவள். ஓங்கார சொரூபமானவள். சகல பாவங்களையும் விலக்கிடுபவள். வீரத்தை தருபவள். ஐந்தாம் நாள் நைவேத்தியம்: தேங்காய் சாதம்.

.ஏழாம் நாள்:
ஏழாம் நாள் அன்னையை மகாலட்சுமியாக வழிபடவேண்டும். கையில் ஜெபமாலை, கோடரி, கதை, அம்பு வில், கத்தி, கேடயம், சூலம், பாசம், தண்டாயுதம், சக்தி ஆயுதம், வஜ்ராயுதம், சங்கு, சக்கரம், மணி, மதுக்கலயம், தாமரை, கமண்டலம் ஆகியவற்றைக் கொண்டிருப்பவள். விஷ்ணு பத்தினியாவாள். பவளம் போன்ற சிவந்த நிறத்தையுடையவள். தாமரை ஆசனத்தில் அமர்ந்து சகல ஐஸ்வரியங்களையும் தருபவள் அன்னையாகும். ஏழாம் நாள் நைவேத்தியம்: கல்கண்டுச் சாதம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டாம் நாள்:
இன்று அன்னையை நரசிம்ஹி ஆக வழிபடவேண்டும். மனித உடலும், சிம்ம தலையும் உடையவள். கூரிய நகங்களுடன் சங்கு, சக்கர தாரிணியாக சிம்ம வாகனத்தில் காட்சி தருபவள் சத்ருக்கள் தொல்லையில் இருந்து விடுபட அன்னையின் அருள் வேண்டும். எட்டாம் நாள்: நைவேத்தியம்: சர்க்கரைப் பொங்கல்.



ஓன்பதாம் நாள்:
இன்று அன்னையை ப்ராஹ்மி ஆக வழிபடவேண்டும். அன்ன வாகனத்தில் இருப்பவள். வாக்கிற்கு அதிபதி யாவாள். ஞானசொருபமானவள். கல்விச்செல்வம் பெற அன்னையின் அருள் அவசியமாகும். ஓன்பதாம் நாள் நைவேத்தியம்: அக்கர வடசல்.

**மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெலாம்.**
**இந்துவாக வாழ்வோம் இந்து தர்மம் காப்போம்.**


Satha Video



• தங்களின் மங்கள நிகழ்வுகளான
• பதிவுத் திருமணம் • பூப்புனித நீராட்டு விழா
• பிறந்த நாள் விழா முதலிய சுப வைபவங்களை இங்கு ஒரே கூரையின் கீழ் • திருமண மண்டபம் (சாதாரண/குளிரூட்டப்பட்ட) • உணவு வகைகள் (காலை மதியம் இரவு) மணவறை (பூ/முத்து) பூ மாலைகள் • மேளம். • மணப்பெண் அலங்காரம் • கேக் வகைகள் • விவாக பதிவாளர் • குருக்கள் • கார் - வேன் - வாடகை வீடுகள் - மற்றும் அறைகள் • டிஜிட்டல் முறையிலான புகைப்படங்கள் - வீடியோ படங்கள் • கரிஸ்மா அல்பம்

Maruthy Services

இல.7-2/9 (ஓர்ச்சாட் கட்டிடம் இரண்டாம் மாடி)
காலி வீதி வெள்ளவத்தை (சவோய் சினிமா முன்பாக)
தொ.பே. : 0112584191, 0112591812, 0112554127
ராஜா: 0777681058 குமார்: 0757360289 சதா: 0777304027 , 0773506333 Hot Line : 077844641


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சாஸ்திரங்களும் சம்பிரதாயங்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாஸ்திரங்களும் சம்பிரதாயங்களும்

# வினைகளைத் தீர்க்கும் விநாயகர் விரதம்



மூவரும், தேவரும், முனிவரும் ஏன்? யாவரும் கடைப்பிடிக்க வேண்டிய முக்கியமான விரதம்! ஆவணிச் சதுர்த்தி விரதம்.

நான்கு வேதங்களும், பதினெட்டு புராணங்களும் இரண்டு இதிகாசங்களும் போற்றும் முழுமுதற் பொருளை நினைத்து அவசியம் அனுஷ்டிக்க வேண்டிய விரதம்.

மனதுக்கு பிடித்த மணாளனை அடைய, தாயே மகனை வேண்டி பூஜித்த விரதம். உன்னதமான பலன்களைத் தரும் உத்தமமான அந்த விரதம்! பிள்ளையாரின் பிறந்த நாளில் அனுஷ்டிக்கப்படும் விநாயகர் சதுர்த்தி விரதம்.

எல்லாம் சரி! தாய் தன் மனதுக்குப்பிடித்த மணாளனை அடைய மகனை வேண்டி பூஜித்ததாக சொல்வது கொஞ்சம் குழப்பமாக இருக்கிறதா? ஆம் பர்வத ராஜனான இமவானின் மகளாகப் பிறந்த பார்வதி தேவி இவ்விநாயகர் விரதத்தை கடைபிடித்து தான், இறைவனை மணாளனாக மணம் புரிந்தாள் மகேஸ்வரி என்கிறது புராணம்.

பிள்ளையார் எளிமையானவர் அவருக்கு இருக்கும் விரதமும் எளிமையானதாக தானே இருக்கும். ஏனெனில் அவருக்கு ஓர் அரச மரத்தடியே போதுமே தான் வீற்றிருக்க! இனி இவ்விரதம் இருக்க வேண்டிய முறைகளைப் பார்ப்போம்.

ஆவணி மாதம் சுக்லபட்ச சதுர்த்தி தினத்திலே அதிகாலை எழுந்து நீராடி தூய்மையான ஆடை அணிந்து, பூஜை அறையில் கோலம் போட்டு அதன் மேல் தலை வாழையிலை ஒன்றை நுனி வடக்குப் பார்த்து இருப்பது போல் போட்டு, அதன் மேல் பச்சரிசி அல்லது நெல் நிரப்பி அதன் மேல் கும்பகலசத்தில் நீர் நிரப்பி வைத்து அதன் மேல் தேங்காய், மாவிலை வைத்து, அருகம்புல் சாத்தி கும்பமாக அலங்கரித்து, விளக்கேற்றி வைத்து, பிள்ளையாருக்குப் பிடித்த கொழுக்கட்டை, அவல், மோதகம், சுண்டல் பழங்கள் என அவர் அவரால் முடிந்த நிவேதனம் செய்து கொள்ளவும். (இதில் ஆடம்பரம் இல்லை அகம் நிறைஞ்ச பக்தி தான் அவசியம்) எல்லாம் தயாரானதும், உங்களுக்கு தெரிந்த சுலோகங்கள், தோத்திரங்களைப் பாடி அறுகம்புல்லால் அர்ச்சிக்கவும் பின்பு தூபம், தீபம் காட்டி நிவேதனம் செய்து விநாயகரை வழிப்படுங்கள். இப்படி பூஜை பண்ற வரைக்கும் உபவாசம் இருக்கிறது நன்மையளிக்கும்.

இந்த விநாயகர் சதுர்த்தியில் பயன் படுத்தக்கூடிய கணபதியோட களிமண் வடிவம், படம் விக்கிரகம் இப்படி எதுவானாலும் இது உடைந்து விடாமல் பார்த்துக்கிறது அவசியம். அதனால் தான் களிமண்ல செய்து பூஜை முடிந்ததும் கரைச்சுடுற பழக்கம் வந்தது.

விநாயகரை கிணறு, ஆறு,ஏரி, குளம் கடல் என எதுலையாவது விட்டுவிடனும். விநாயகரை கடலில் விடும் நாளை ஒரு விழாவாகவே இந்தியாவில் கொண்டாடுவார்கள். கலசத்து நீரை மறுநாள் வீடு முழுவதும் தெளித்து மிகுதியை செடிகளில் ஊற்றி விடுங்கள்.

பின்பு அன்றைய தினம் இரவு நிலவு வந்ததும் சந்திரனைப் பார்த்துவிட்டு, பின்பு கணபதிக்கு தீபம்காட்டி நமஸ்காரம் செய்வது அவசியம். இப்படி செய்தால் தான் விரதம் முழுமை பெறும். எனவே இவ் ஆவணிச்சதுர்த்தி விரதத்தை அனுஷ்டிக்கிறதால் அல்லல்கள் அகலும், ஆனந்தம் ஆரம்பமாகும். ஆனை முகன் (அருளால்) அருள் பெருகட்டும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# பிள்ளையார்

## பிள்ளையாருக்குப் பிடித்தவை



பிள்ளையாருக்குப் பிடித்த நிவேதனம் சர்க்கரைப்பொங்கல், அவல், கடலை, சுண்டல், மோதகம், கரும்பு, வெள்ளரிப்பழம் என்பன.

## பிள்ளையாரின் ஐந்து கரங்களும் செய்யும் தொழில்



பிள்ளையாரின் ஐந்து கரங்களும் செய்யும் தொழில்.

| | | |
|---|---|---|
| அங்குசம் | : | அழித்தல் |
| பாசம் | : | படைத்தல் |
| மோதகம் | : | அருளல் |
| எழுத்தாணி | : | காத்தல் |
| தும்பிக்கை | : | மறைத்தல் |

## விநாயகருக்கு சிதறுதேங்காய் உடைப்பது ஏன்?



இது நம்மிடம் உள்ள தீய வினைகள் சிதறி! அனைத்து துன்பங்களிலும் இருந்து விடுதலை பெற்று! (நொறுங்கி) இறுதியில் தூய பக்தி எனும் அமுத நீர் வெளிவருவது போல் விநாயகரின் அருள் எமக்கு கிடைக்கும் என்பதைக் குறிக்கும்.

## விநாயகரின் அருள் கிடைக்க...

| | |
|---|---|
| மகாகணபதி | : பரிபூரண சித்திகிடைக்க |
| வக்ரதுண்ட கணபதி | : அதிர்ஷ்ட லாபம் கிடைக்க |
| சங்கடஹரகணபதி | : துக்க நிவாரணம் கிடைக்க |
| ஹேரம்ப கணபதி | : மனச் சாந்தி கிடைக்க |
| சித்திக் கணபதி | : எல்லா காரியமும் வெற்றிபெற. |

இவ் ஆனைமுகனை துதித்தால் பூரண அருள் உங்களுக்கும் கிடைக்கும்.

திருமதி. பவானி பாலசுப்பிரமணியம், வெள்ளவத்தை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாஸ்திரங்களும் சம்பிரதாயங்களும்

# 'ஓம்' என்றும் 'நமோ' என்றும் மந்திரங்களில் சேர்த்துக் கொள்ளும் போது...



'ஓம் நமோ நாராயணாய' என்ற மந்திரத்தில் 'நமோ' என்று சொல்வது காலில் விழுந்து வணங்குகிறேன் என்பதை குறிப்பதாகும் காலில் விழுந்து வணங்குவதென்பது இரு தத்துவங்களைக் குறிக்கும். ஒருவன் தன்னை விட உயர்வான ஒன்றின் முன்னால்தான் அப்படி வணங்குகிறான். அவ்விதமாக வணங்குகிறபோது தனது திறமை, சக்தி, புத்தி எல்லாவற்றையுமே அந்த உயர்ந்த ஒன்றின் முன்னால் வைத்து தன்னையிழந்து சரணாகதி அடைந்து விடுகிறான்.

"நமோ" என்று சொல்லும் போது மானசீகமாகவே ஜபம் செய்பவன் இப்படிப்பட்ட சரணாகதி நிலையை எட்டி விடுகிறான். அவனது போலித்தனமான தற்பெருமை, அகங்காரம், ஆணவம் எல்லாம் அவனை விட்டு விலகிவிடுகின்றன. அந்நிலையில் அவன் தன்னுள் இருக்கும் பரம்பொருளைப் புரிந்துகொள்வது எளிதாகிவிடுகிறது. 'ஓம்' என்பது அப் பரம்பொருளின் அடையாளம். இதற்கு ஒரு உருவமும் கொடுக்கலாம். 'ஓம் நமோ நாராயணாய' என்று சொல்லும் போது இம் மூன்றையுமே ஜபம் செய்பவன் கண்டுகொண்டு நாராயணா என்ற பரம்பொருளின் முன்னிலையில் தன்னை இழந்து பரம்பொருளை உணர்ந்து சரணாகதி நிலையை அடைகிறான்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிவனின் நாட்டியத் தோற்றமும் ஆனந்த நடராஜராக வழிபடுவதில் உள்ள தத்துவமும்

உருவாவது அழிவது, மீண்டும் உருவாவது இதுவே முடிவில்லா சிருஷ்டி தத்துவமாகும். அசைவில்லா ஜடமாக இருக்கும் பிரம்மனை சிவபெருமான் ஆனந்த நடனத்தின் மூலம் உயிர்ப்பித்து எழச் செய்கிறார். இசை வடிவமான ஒலி எழுப்பும் அலையில் அதுவும் ஆனந்த கூத்தாடுகின்றது. கடைசியில் ஆடி ஓய்ந்து அடங்கிவிடுகிறது. வாழ்க்கையின் தத்துவமும் இப்படி எழுவதும், ஆடுவதும், அடங்குவதுமான உணர்வுகளின் அடிப்படைத்தானே?. இதைத்தான் இந்த ஆனந்த நடனமும் உணர்த்துகிறது. மேலே தூக்கிய வலது கரத்தில் உடுக்கை இருக்கிறது. இது பிறப்பின் ஒலியை காட்டுகிறது. மேலே தூக்கிய இடது கையிலோ நெருப்பு இருக்கிறது இது முடிவில் நேரும்அழிவை உணர்த்துகிறது.

இவையிரண்டும் சமநிலையில் இருப்பது. இவையிரண்டையும் நாம் சரி சமமான உணர்வுடன் பார்க்கவேண்டும் என்பதையே காட்டுகிறது. இரண்டாவது வலது கை அபயஹஸ்திரத்தைக் காட்டுகிறது. பிறவியிலிருந்தே அழிவு வரையில் நமக்கு ஏற்படக்கூடிய துன்பங்களை இறைவனை நம்பினால் அவன் ஏற்றுக்கொண்டு காப்பாற்றுவான் என்பதை அது காட்டுகிறது. இரண்டாவது இடது கை பாதத்தை காட்டுகிறது. அந்த பாதம் மேலே தூக்கிய பாதம் இறைவனை வழிபட்டால் மாயையிலிருந்து விடுபட்டு மேலே எழ வாய்ப்புண்டு என்பதயே காட்டுகிறது. வலது கால் கீழே அரக்கனின் உடலை மிதித்துக் கொண்டிருக்கிறது. தீய சக்திகளை நாம் மிதித்து அடக்கி வெல்ல வேண்டும் என்பதையே இது உணர்த்துகிறது. ஆனந்த நடனமிடும் நடராஜனின் உருவம் உலகத்தின் இயக்கம் அனைத்தையும் ஆட்டுவிக்கும் இறைவனின் வடிவம். இறைவன் ஆட உலகமே ஆட்டுவித்தபடி ஆடுகிறது என்பதே இதன் அர்த்தம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாஸ்திரங்களும்
சம்பிரதாயங்களும்

# உருத்திராட்சம்



சிவனைக் குறிக்கும் அடையாளங்களைச் சிவசின்னம் என்பர். அந்த வகையில் திருநீறு, உருத்திராட்சம் என்பன சிவ சின்னங்களாகும். இவ்விரு சின்னங்களும் ஒவ்வொருவரும் அணிய வேண்டியவையாகும். திருநீறு வியர்வைகளாலும் வேலைகள் செய்வதினாலும் ஒருவரிடத்திலிருந்து நீங்கி விடலாம். ஆனால் எந்நேரமும் நீங்காது தரித்திருக்கும் சின்னம் உருத்திராட்சம் ஆகும்.

மகாருத்திரமூர்த்தி முருகனுக்கு கூறும் போது உருத்திராட்சம் என்பது உருத்திரனின் கண் என்கிறார். முன்னொரு காலதத்திலே திரிபுரத்து அசுரர்கள் செய்த கொடுமைகளைத் தாங்கவெண்ணாத தேவர்கள் என்னிடம் வந்து முறையிட்டபோது யான் கண்களை மூடி ஆயிரம் திவ்விய வருடங்கள் மகா மந்திரத்தைச் செய்து கண்களைத் திறந்தபோது அசுரர்கள் அழிந்தனர். எனது மூன்று கண்களிலிருந்தும் ஜலத்துளிகள் வீழ்ந்தன. அத்துளிகளில் இருந்து உருத்திராட்ச விருட்சம் உண்டாயின. அதன் பழங்களே (பெர்ரிப்பழம்) உருத்திராட்சமாயின. வலது சூரியக் கண்ணிலிருந்து பன்னிரண்டு வகையான விருட்சம் தோன்றியது. இவை கபில நிற மணிகள் இடது கண்ணாகிய சந்திரக் கண்ணிலிருந்து பதினாறு வகையான விருட்சம் தோன்றியது. இவை வெள்ளை நிறமணிகள். இம்மரங்கள் இந்தோனேசியா, கிழக்காசியா, மலேசியா, அவுஸ்திரேலியா, பசுபிக்தீவுகள், நேபாளம், இந்தியா, இலங்கை போன்ற இடங்களில் காணப்படுகின்றது. இப்போ மாவிட்டபுரம் கந்தசுவாமிகோவில், தெல்லிப்பழை துர்க்காதேவி கோயில், அளவெட்டி நாகவரத நாராயணர் கோயில் போன்ற இடங்களிலும் வளர்க்கப்படுகிறது.

உருத்திரனின் கண்ணில் இருந்து தோன்றியமையால் உருத்திராட்சம் என்று அழைக்கப்படுகின்றது. அஷ்டம் என்றால் கண் எனப் பொருள்படும். இதனால் அட்ச மணி அக்குமணி சிவமணி, கண்மணி எனப்பல பெயர்களால் அழைக்கப்படுகிறது. பாவங்களைக் கண்டிப்பதால் கண்டிகை என்றும் அழைப்பர்.

இம் மணிகள் ஒன்று முதல் 16 முகம் வரை காணப்படுகின்றது. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் 25 முகம் வரை காணப்படுகிறது என்கிறார். இவ்வாறு முப்பத்தெட்டு வகை உருத்திராட்சம் உண்டு. இம் முக மணிகளையும் அதிதேவதைகளையும் நோக்குவோம்.

## அதிதேவதை

| | | | |
|---|---|---|---|
| ஒருமுகம் | : சிவரூபம் | எட்டு முகம் | : விநாயகர் |
| இருமுகம் | : அர்த்தநாரி | ஒன்பது முகம் | : வைரவர் |
| மூன்றுமுகம் | : பிரம்மன் | பத்து முகம் | : விஷ்ணு |
| நான்குமுகம் | : பிரம்மன் | பதினொரு முகம் | : உருத்திரர் ஏகாதசருத்திரர் |
| ஐந்துமுகம் | : காலாக்கினி | பன்னிரெண்டு முகம் | : ஆதித்தர் |
| ஆறுமுகம் | : முருகன் | பதின்மூன்று முகம் | : பரமசிவன் |
| ஏழுமுகம் | : மன்மதன் | பதின்நான்கு முகம் | : சதாசிவம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எண்ணெய் தேய்த்து குளிப்பதன் பலன்

**பெண்களுக்கு:**

ஞாயிறு எண்ணெய் தேய்த்து குளித்தால் வடிவமும் அழகும் போய்விடும்.

- திங்கள் எண்ணெய் தேய்த்து குளித்தால் அதிகப் பொருள் சேரும்
- செவ்வாய் எண்ணெய் தேய்த்து குளித்தால் துன்பம் வரும்.
- புதன் எண்ணெய் தேய்த்து குளித்தால் மிக புத்தி வந்திடும்.
- வியாழன் எண்ணெய் தேய்த்து குளித்தால் உயரறிவு போய்விடும்.
- வெள்ளி எண்ணெய் தேய்த்து குளித்தால் செல்வம் மிகும்
- சனி எண்ணெய் தேய்த்து குளித்தால் ஆயுள் அதிகமாகும்

மேற்கண்டவையாவும் பெண்களுக்கு

**ஆண்களுக்கு:**

ஆண்கள் சனி புதன் எண்ணெய் தேய்த்து குளிப்பது நல்லது

- ஆண்கள் திங்கட்கிழமை எண்ணெய் தேய்த்து குளித்தால் முடக்கு வாதம் வரும்
- செவ்வாய்க்கிழமை எண்ணெய் தேய்த்து குளித்தால் முதுகு பாலை நோய் வரும்.
- வியாழக்கிழமை எண்ணெய் தேய்த்து குளித்தால் கால் குடைச்சல் வரும்
- வெள்ளிக்கிழமை எண்ணெய் தேய்த்து குளித்தால் மூட்டு வாதம் வரும் நம் முன்னோர்கள் சனியையும், புதனையும் ஏன் தேர்ந்தெடுத்தார்கள். மற்ற செல்வங்களை விட அறிவினையும், உடல் நலத்தினைத்தான் உயர்வாக நினைத்தார்கள் மதித்தார்கள்.

எண்ணெய் தேய்த்து குளிக்கும் போது குளிர்ந்த நீரில் கூடாது. வெதுவெதுப்பான சுடு நீரில்தான் குளிக்க வேண்டும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாஸ்திரங்களும் சம்பிரதாயங்களும்

# மாவிலை வெற்றிலை

நாம் சம்பந்தப்பட்ட எந்த விழாவும் சரி! மங்களகரமான பண்டிகை தினங்களாயினும் திருமணம் போன்ற நிகழ்வுகளாயினும் சரி "மாவிலைதோரனத்துக்கும் முக்கியத்துவம் தருகிறோம். விழா மண்டபங்கள் ஆலயங்கள். இல்லங்கள் - வீதிகள் - என அலங்காரத்திற்கும் ஆரோக்கியத்திற்கும் சிறப்பை பெறுகிறோம்.

## மாவிலை



நாம் எந்தவொரு மங்களகரமான நிகழ்வுகளுக்கும் "மாவிலையின் காம்பின் நுனியை முன்புறமாக சிறிதளவு வளைத்து உட்புறாமாக துளையிட்டு மாவிலையின் காம்பை செலுத்தவேண்டும் "மாவிலையின் காம்பு பின்புறம் வரவேண்டும் காம்பு மறைந்திருக்க வேண்டும். முன்புறம் பார்க்கும் போது காம்பு தெரியாது! இல்லங்களில் வாசல் நிலைகளில் மூன்றுக்கு குறையாமல் 3.5.7.9. என வசதிக் கேற்றபடி தொங்க விடுதல் நன்று இதுவே சரியானமுறையாகும்.



## வெற்றிலை

இதே போன்று நாம் பூஜைப்பொருட்களை பூஜைத்தட்டுகளில் நாம் சுற்றிவர வைக்கும் போது! "வெற்றிலையில் காம்பு" உட்புறமாகவும் நுனிப்பக்கம் வெளிப் புறமாகவும் சுற்றிவர வைக்கவேண்டும். நடுவில் தேங்காய் - கனிவர்க்கங்கள் - குங்குமம் - சந்தனம் - பாக்கு கற்பூரம் - ஊதுபத்தி - உதிரிப்பூக்கள் - பூமாலைகள் சுவாமிக்குரிய "சார்த்துப்பட்டு" முதலியன வைக்கப்படல் வேண்டும் வெற்றிலைக் காம்பு மறைந்திருக்க வேண்டும். இது தான் சரியான வழிபாட்டு முறைகள்.

## திருமணம்

இதே போன்றுதான் திருமணம் போன்ற மங்களகரமான நிகழ்வுகளுக்கு தட்டுகளில் வெற்றிலையை வெற்றிலைக் காம்பு உட்புறமாக நுனிபக்கம் வெளிப்புறமாகவும் சுற்றிவர வைத்தல் வேண்டும் தட்டின் நடுவில் தோங்காய் கனிவர்க்கங்கள் - பாக்கு - குங்குமம் - சந்தனம் - உதிரிப்பூ பூமாலைகள் - திருமணத்திற்குறிய அலங்காரப்பொருட்களும் மணமகனுக்குறிய பட்டுவேட்டி சால்வை போன்றவை வைத்தல் வேண்டும் தமது வசதிக்கேற்றபடி மூன்றுக்குள் குறையாமல் - 3.5.7.9.11 என இதர மங்கலப் பொருட்களை வைத்து விட்டால் வெற்றிலையின் காம்பு மறைந்துவிடும் மறைந்திருக்கவேண்டும் திருமண கூடத்தில் நாம் முக்கிய கவனத்தில் கொள்ளத்தக்கவை முதன் மாணல் முற்றிலும் மாணல் என்பார்கள் நம் பெரியோர்கள். இங்கு மாணல் என்றும் சொல் நேர் நேரானது என்று அர்த்தங்கள் கொண்டது நம் முன்னோர்கள் நமக்கு கற்றுத் தந்த முறைகளை இன்றைய தலை முறையினருக்கும் கற்றுத்தந்து தொடர்ந்து பேணி வருவோம்.

விஸ்வப்பிரம்மஸ்ரீ
மகாதேவர் இராமகிருஸஷ்ணன் ஆச்சாரி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துமத விக்கிரக வழிபாடு



நாம் ஒரு அழகான ஆணையோ, அல்லது பெண்ணையோ பார்க்கும் போது மனத்தில் மென்மையான உணர்வுகள் தோன்றுகின்றன. உடல் பலம் கொண்ட உரு பயில்வானை பார்க்கும் போதும் விளையாட்டுகளில் சாகசம் செய்யும் போதும் மனதில் வீர உணர்ச்சி எழுகிறது. ஓர் உணர்ச்சி மிகுந்த தாயையும், குந்தையையும் பார்க்கும் போது மனதில் உணர்ச்சிகள் கனிந்து எழுகின்றன. வெவ்வேறு விதமான விக்கிரக வடிவங்கள் யாவும் இப்படிப்பட்ட மென்மையான உயர்ந்த உணர்ச்சிகளை நம் உள்ளத்தில் தோற்றுவிப்பதற்காக எழுந்தவையே.

பைரவர், அனுமான், காளி போன்ற உக்கிரமான தோற்றம் கொண்ட உருவங்கள் நமது மனதில் வீர உணர்வைத் தோற்றுவிக்கின்றன. சரஸ்வதி, லட்சுமி போன்ற உருவங்கள் கலை உணர்வை தூண்டுகின்றன. இராமர், கிருஷ்ணர் போன்ற உருவங்கள் மனதில் மென்மையான உணர்வைத் தோற்றுவிக்கின்றன. காமாட்சி, பராசக்தி வடிவங்கள் தாய்மை உணர்வுக்கு மேன்மை தருகின்றன. இப்படி வாழ்க்கையில் நாம் உணரும் உணர்ச்சிகளை ஒட்டியே இந்த விக்கிரகங்களின் வடிவங்களும் அமைந்துள்ளன.

## ஆலயங்களுக்குச் செல்லும்போது....



1. சுத்தமாகச் செல்ல வேண்டும்.
2. புஷ்பம், பழம், வெற்றிலை, பாக்கு கற்பூரம், ஒரு தீபத்துக்கு வேண்டிய அளவு பசு நெய் அல்லது நல்லெண்ணெய், ஊதுபத்தி ஆகியவை அல்லது இவைகளில் எது முடியுமோ அதை எடுத்துச் செல்லவும்.
3. ஆலயத்தில் பலிபீடத்துக்கு முன் நமஸ்காரம் செய்ய வேண்டும்.
4. நமஸ்காரம் செய்யும்போது கால்களை நீட்டும் பக்கத்தில் சந்நிதிகள் பெரியோர்கள் இல்லாதபடி செய்ய வேண்டும்.
5. திரை போட்டிருக்கும்போது நமஸ்காரம் செய்யக்கூடாது.
6. ஒவ்வொரு சந்நிதியிலும் அங்குள்ள தெய்வங்களுக்கு ஸ்தோத்திரம் சொல்ல வேண்டும்.
7. ஆலயத்துள் தெய்வ சம்பந்தமான ஸ்தோத்திரம், தெய்வ சம்பந்தப்பட்ட ஆன்மீக விஷயங்களை மட்டும் பேசவும்
8. ஆலயத்தில் வீண் பேச்சு வேண்டாம். காலணிகள் உபயோகிக்கக்கூடாது. எச்சில் துப்புதல், அசுத்தம் செய்தல் கூடாது. சப்தம் போட்டு உரக்கப் பேசக் கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாஸ்திரங்களும் சம்பிரதாயங்களும்

# தான பலன்கள்



- வஸ்த்ர தானம் செய்தால் - ஆயுள் விருத்தி
- பூமி தானம் - ப்ரம்ம லோக பதவி
- தேனை வெண்கலப் பாத்திரத்தில் வைத்து தானம் செய்தால் - புத்திர பாக்யம் கிடைக்கும்
- நெல்லிக்காய் - ஞானத்தைக் கொடுக்கும்.
- புத்தக தானம் கொடுத்தால் - ஞானம் கிடைக்கும்.
- கோவிலில் தீப தானம் - சக்ரவர்த்தி பதவி கிடைக்கும்.
- தீப தானம் - கண் பார்வை விருத்தி
- விதை தானம் செய்தால் - தீர்க்காயுள் உண்டு.
- அரிசி தானம் - பாவம் போகும்
- தாம்பூலம், பழம் - ஸ்ர்வர்க்க பதவி வாய்க்கும்
- நெய் தானம் - ரோக நிவர்த்தி
- சர்க்கரை தானம் - ஆயுள் விருத்தியாகும்
- பால் தானம் - துக்கம் அகலும்
- எள் தானம் கொடுத்தால் - யமபயம் அகலும்
- கடலை தானம் - ஸந்தான விருத்தி மற்றும் பாவம், ஏழ்மை அகலும்
- புஷ்பம், துளசி, கறிகாய் - சுவர்க்கம் அளிக்கும்
- பருத்தி தானம் - குஷ்டம் அகலும்
- அன்னதானம் செய்தால் - சுவர்க்க பதவி



# ஆலய மணி

திருக்கோயில் பூஜைகள் நடக்கும்போது மணி அடிப்பது எதற்காக என்றால் மணியின் ஓசை ஓங்கார நாதமாகும்!. இவ்வோசை இறைசக்தியை உணர்வதற்காகவும், தீய சக்திகளை (எண்ணங்களை) அகற்றவும் எழுப்பப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கடவுள் வழிபாட்டில்

## கடைப்பிடிக்க வேண்டியவை

மூலவர் மற்றும் அம்பாள் ஆகிய திருவுருவங்களுக்கு அபிஷேகம் நடைபெறும்போது உட்பிரகாரத்தில் வலம் வருவது கூடாது.

அஷ்டமி, நவமி, அமாவாசை, பௌர்ணமி, மாதப் பிறப்பு, சோமவாரம், சதுர்த்தி இந்த நாட்களில் வில்வம் பறிக்கக் கூடாது!. இதற்கு முதல் நாள் மாலையிலேயே வில்வம் பறித்து வைத்து கொள்ள வேண்டும்.

மேலே துண்டு போட்டுக் கொண்டு சுவாமிதரிசனம் செய்யக் கூடாது.

கொடி மரம், நந்தி, பலிபீடம், கோபுரம் - இவைகளின் நிழலை மிதிக்கக் கூடாது.

விளக்கில்லாத போது இருட்டில் வணங்கக் கூடாது.

தகாத வார்த்தை மற்றும் எதிர்மறை சொற்களையும் கோவிலுக்குள் உச்சரிக்கக் கூடாது.

கோவிலுக்குள் தூங்குவதைத் தவிர்க்க வேண்டும். கோவிலுக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பியவுடன் கால்களைக் கழுவக்கூடாது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நவ! நவமாய் வீற்றிருக்கும் நவராத்திரி நாயகியே!

தாயுமானவருக்கோ! ஒரு நாள் தான் சிவராத்திரி
தாய்! தேவிக்கோ ஒன்பது நாளும் நவராத்திரி.
தாயே துர்க்கா! தும்பை மலர்கொண்டு!
உன் திருநாமம் துதிப்போர்க்கு! இன்னல் அகன்று!
துன்பம் நீங்கி காத்திடுவாள் காத்யாயிணி!

செந்தாமரை மலரினில் வீற்றிக்கும் செல்வியே!
செளிப்பான வாழ்வு! செல்வத்தை தந்து!
எம் வறுமைகள் நீங்கி மங்கையரின் குங்குமம் காத்து!
சகல செளபாக்கியம் தந்திடு நாராயணியே!

கையில் வீணைக் கொண்டு வீற்றிக்கும் தேவியே!
கலையாத கல்வியும்! ஞானமும் தந்து!
ஞாலமும் போற்றிட நல்வழி காட்டிடம்மா!
கலையரசி கலைவாணியே!

தசரா கொண்டாடும் நவ நாயகியே!
நான் என்ற அகந்தை அழிந்து!
மனங்களில் இருந்தும் தீயவை அழித்து!
மகிஷனை அழித்த மர்த்தினியே!
எமக்கு! அருள் (அருள்வழி) புரிவாய் அன்னையே!

திருமதி. பவானி பாலசுப்பிரமணியம்
வெள்ளவத்தை




## தையல் / சமையல் வகுப்புகள்

Block Method (SCIENTIFIC CUTTING) Without Block Method (TAILORING) இவற்றில் நீங்கள் விரும்பிய Method மூலம் Saree Blouse, Shalwar உட்பட அனைத்து உடைகளும் தைப்பதற்கு பயிற்றுவிக்கப்படும். Hand Embroidery, Cookery, Fabric Painting, colouring Icing Classes உம் நடைபெறுகின்றன. Certificates வழங்கப்படும்

31-1/2, Arthusa Lane, Wellawatte. Tel:2361062


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Annai Home Decor

Curtain & Cushion Materials and All type of Curtaining, Cushioning and Tailoring Etc.



40-A, Galle Road, Wellawatte.
Tel : 2 584726 | 2 580668

## KUMARAN SILKS

Dealers in Textile,
Specialists
in Bridal & Silk Sarees,
Readymade Garments
and Cosmetics

N0: 291, Main Street,
Colombo 11.
Tel: 2441701, 4717574
Tel/Fax: 2441702
Web: www.kumaransilks.lk



## Sunco Fancy

Professional in Cosmetic Items,
Costume Jewellery,
Latest Hand Bag and Salon Accessories



No. 465 A, Galle Road, Wellawatte. Tel : 4 892466

## Chinese Gift Palace

*Dealers in Handicraft, Brassware, Gift Items, Statues, Curios etc.*



78, Galle Road, Wellawatte. Tel: 011-2594931
E-mail : rogerhsu@sltnet.lk

## FRIENDS PHARMAA

Dealers in Pharmaceutical & Grocers
*INDIAN COSMETICS GOODS*

FREE HOME DELIVERY



No,317 C, Galle Road, Wellawatte.
Tel: 0112 505213 | Mob: 0775 196364

## Indian Design Tailors

Ladies & Gents
Specialist in Salwar
& Saree Blouses
Indian Cutting



62/18/1, Galle Road, Wellawatte.
Tel: 077 3730650 | 077 9321324



## Devi JEWELLERS



No. 269, Galle Road, Wellawatte. Tel: 2580011/ 2360728
Web: devijewel.com

## New One Singapore Jewellery





Dealers in Ready Made
Genuine 22ct Gold
Jewelleries

157/1, Sea Street, Colombo-11.
Tel: 011 2332170, 077 6162214


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென் இந்திய சுற்றுலா திருதலயாத்திரை
## ஆன்மீக பயணம்









வரலாற்று புகழ்மிக்க திருதலங்களை தரிசிக்கவும் 63 நாயன்மார்களும் 18 சித்தர்களும் பெற்ற ஞான கண்ணாகிய அறிவு கண்ணை ஆறாவது அறிவு கண்ணை குரு அருளாள் திறக்கவும்.

இப்பிறவியிலேயே வீடுபேறு பெறவும் மரணமில்லா பெருவாழ்வு வாழவும். இவ்வுடம்பிலேயே இறைவனின் திருவடியை கண்டு ஜோதி தரிசனம் பெறவும் இறைவனுடன் இணையும் அதி உன்னத 18 சித்தர்களின் சூஸ்ம தியானம்.

பொய்ஞானம் விடுத்து மெய்ஞானம் என்ன வென்று அறிவை அறியவும். திருவாசகம், திருஅருட்பா, மெய்ஞானபோதம், சிவஞானபோதம், ஔவைகுறளில் கூறப்பட்ட (சைவசித்தாந்த வேதத்தின் மெய் பொருள் காண்பது அறிவு) என்ன என்பதை அறியவும் ஞானயோகம் என்றால் என்ன? பக்தி யோகம் என்றால் என்ன? உடல் தியானமா? உயிர் தியானமா? (உயர் தியானம்) என்ன என்று அறியவும் ஓர் அரிய சந்தர்ப்பம்.

**உயர் மெய்ஞான விளக்கம் விபரங்களுக்கு முன் அனுமதி பெற்றிட தொடர்பு கொள்ளவும்**

**பிரம்மரிஷி ஸ்ரீலஸ்ரீ ஞானகுரு ஜோதிதாஸன்.**

**Wellawatte, Colombo 06.**






இலவச திருமண சேவை (உள்நாடு, வெளிநாடு) இந்து மணமக்களை பெற்றுக் கொள்ளவும், ஜாதகபலன், வருஷபலன், திருமண பொருத்தம் பார்க்கவும், ஜாதக தோஷ பரிகாரங்கள் நிவர்த்திகளைப் பெற்றிடலாம். உங்கள் பிரச்சினை எதுவானாலும், திருமணத் தடை, புத்திரபாக்கியமின்மை, கணவன், மனைவி பிரிவு, வெளிநாட்டு பிரயாணத் தடை, கல்வி, தொழில், வியாபார விருத்தி பெற்றிடலாம்.

## பிரேமி ஜோதிட நிலையம்

NO 7/3, DAVIDSON ROAD, BAMBALAPITIYA
TP:0115711775





# VAANIE TRILORING

தையல்கலை பயிற்சி தைப்பு

**BOMBAY CUTTING INDIAN TAILORING**

பெண்களுக்கான ஆடைகள் சாரி பிளவுஸ்கள், சல்வார் தைத்து கொடுக்கப்படும்.

**(இல்லத் அரசிகள் அன்புடன் அழைக்கலாம்.)**

VAANIE TAILORING

**7/3, Davidson Road, Bambalapitiya, Colombo 04. Tel: 075 7223672**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குருவாயூர் ஸ்ரீ குருவாயூரப்பன் ஆலயம்

பகவான், குழந்தை கிருஷ்ணனாக அருள் புரியும் திருத்தலம். கேரள மாநிலம் திருச்சூரில் இருந்து சுமார் 22கி.மீ.தூரத்தில் அமைந்துள்ளது குருவாயூர். திருச்சூரில் இருந்து பஸ் மற்றும் ரயில் மூலம் குருவாயூர் செல்லலாம். இது தென் துவாரகை எனப்போற்றப்படுகிறது.

நாரயண பட்டத்திரி சம்ஸ்கிருதத்தில் எழுதிய நாராயணீயம், பூந்தானம் என்ற மகான் மலையாளத்தில் எழுதிய ஞானப்பானை ஆகிய நூல்கள் ஸ்ரீகுருவாயூரப்பனது மகிமைகளை எடுத்துரைக்கின்றன.

குருவாயூரைச் சுற்றியுள்ள ஊர்களில் எழுத்தச்சன், பட்டத்திரி, லீலாசுகர், பூந்தானம் ஆகிய மகான்களும் கவிஞர்களும் வாழ்ந்திருந்தனர்.

மேல்பத்தூர் நாராயண பட்டத்திரி, பக்த சிரோன்மணி வாசுதேவன் நம்பூதிரி ஆகியோர் மகாவிஷ்ணுவாகவும் பூந்தானம், வில்வ மங்களம், மானதேவன் குருர் அம்மா ஆகியோர் பாலகிருஷ்ணனாகவும் ஸ்ரீகுருவாயூரப்பனை வழிபட்டனர்.

நாரத புராணத்தின் குருபாவனபுர மகாத்மியம். குருவாயூர் தலத்தின் மகிமைகளை விவரிக்கிறது.

துவாபர யுகத்தில், துவாரகையை ஏழு நாட்களில் கிருஷ்ண விக்கிரகம் மிதக்கும். அதை தேவகுரு பிரகஸ்பதி மூலம் பிரதிஷ்டை செய்ய வேண்டும்! என்று உத்தவரிடம் அருளினார் ஸ்ரீகிருஷ்ணர்.

குருவும் வாயு பகவானும் அந்த விக்கிரகத்தை பிரதிஷ்டை செய்ய தேடினர். அப்போது கேரளத்தில் தாமரைக் குளக்கரை ஒன்றில் சிவபெருமான் தவம் செய்து கொண்டு இருப்பதைக் கண்டார்கள்.

அவர் அருளியபடி விஸ்வகர்மா நிர்மாணித்த கோயிலில் அந்த விக்கிரகத்தை குருவும் வாயுவும் பிரதிஷ்டை செய்தனர் அந்த சிவபெருமான் மம்மியூரில், பார்வதி தேவியுடன் எழுந்தருளியுள்ளார் என்பது ஐதீகம். இவ்வாறு குருவும், வாயுவும் சேர்ந்த பிரதிஷ்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்ததால் இந்தத் தலம் குருவாயூர் ஆனது.

பரீக்ஷித்து மன்னனின் மகன் ஜனமேஜயன். அவன் தன் தந்தையின் மரணத்துக்குக் காரணமான நாக அரசனான தட்சகன் என்ற பாம்பைப் பழிவாங்கும் பொருட்டு உலகில் உள்ள பாம்புகளைக் கொன்று குவித்தான். அவ்வாறு இறந்த அப்பாவிப் பாம்புகளது சாபத்தால், ஜனமேஜயனுக்கு குஷ்ட நோய் ஏற்பட்டது. கொடுமை தாங்காமல் ஜனமேஜயன் தற்கொலை செய்ய முயன்றபோது. அவன் முன் தத்தாத்ரேயர் தோன்றினார். அவரது அருளாசியின்படி ஜனமேஜயன், குருவாயூர் சென்று குருவாயூரப்பனின் திருவடி தொழுது நோய் நீங்கியதுடன் சகல வளங்களும் பெற்றான் என்கின்றன புராணங்கள்.

1766-ல் ஹைதர் அலியின் கட்டுப்பாட்டில் வந்த கோயிலை, பெருந்தொகை கொடுத்து மீட்டனர்.

மைசூரை ஆட்சி செய்த திப்பு சுல்தான்,1789-ம் ஆண்டு மலபார் மீது படையெடுத்தார். அப்போது குருவாயூரப்பன் விக்கிரகத்தைக் காப்பாற்ற எண்ணிய மல்லிகேசரி நம்பூதிரி, கக்காடு ஓதிக்கன் என்பவர்கள் இந்தக் கோயிலின் மூலவரான குருவாயூரப்பனை அருகில் உள்ளகிணற்று நீரில் மறைத்து வைத்தனர். பிறகு உற்சவ மூர்த்தியை அம்பலப்புழா என்ற ஊருக்கு எடுத்துச் சென்றனர். சுமார் 1789-லிருந்து 1792 வரை குருவாயூர் உற்சவரை அங்குள்ள கோயிலில் வைத்து ஆராதித்தனர். இதை நினைவுகூரும் விதமாக இன்றும் அம்பலப்புழா கோயிலில் உள்ள ஸ்ரீகுருவாயூரப்பன் விக்கிரகத்துக்கு வழிபாடுகள் நடைபெறுகின்றன.

திப்பு சுல்தான் தன் வீரர்களுடன் குருவாயூர் ஆலயத்துக்குள் சென்றபோது. ஒரு குரல் அவரை நிற்கும்படி கட்டளையிட்டதாம் அதற்கு மதிப்பளித்த திப்பு சுல்தான் குருவாயூர் ஆலயத்துக்குக் கொடைகள் பல வழங்கியுள்ளார்.

1970-ம் ஆண்டு நவம்பர் 29-ம் தேதி குருவாயூர் ஆலயம் தீ விபத்துக்குள்ளானது. தீயை அணைக்க சுமார் ஐந்து மணி நேரம் ஆனதாம். ஆலயத்தின் பெரும்பாலான பகுதிகள் சேதம் அடைந்தாலும், குருவாயூரப்பனின் கர்ப்பகிரகம், கணபதி, ஐயப்பன் மற்றும் தேவி சந்நிதிகள் போன்ற பகுதிகள் பாதிப்பு அடையாததற்கு ஸ்ரீகுருவாயூரப்பனின் அருளே காரணம்.

காஞ்சி ஸ்ரீமகாபெரியவர் குருவாயூர் கோயிலுக்கு திக்விஜயம் செய்து ஸ்ரீகிருஷ்ணரை தரிசித்து மகிழ்ந்துள்ளார்.



நாமும் போகலாம் ஆன்மிக சுற்றுலா!
சென்னை கோவில்கள்
*Daily Departure
3 Days / 2Nights Cost Includes
> Return Air Tickets > A/C Transport > Accommodation
Rs. 19,990/=
*Conditions apply
flex Travels & Tours
Total Travel Solution
(A Subsidiary of Flex Graphic)
4, IBC, Road, Wellawatte.
Hotline: 0777-555026

ADVERTISE HERE
Bright Your Business!
This Size 9.6cm x 6.4cm
Call: 0777-555026

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்நாட்டின் ஆறுபடை வீடுகளில் ஒன்றான பழநி திருக்கோயிலைப் பார்த்தவாறு அமைந்துள்ளது ஸ்ரீகுருவாயூரப்பன் கோயில்.

குருவாயூர் கோயில் - சதுர வடிவில் மலையாள கட்டட பாணியில் வடிவமைக்கப் பட்டுள்ளது. இதன் கூரைகள் செப்புத் தகட்டால் வேயப்பட்டுள்ளன. இதன் கிழக்கு கோபுர வாசலில் இருந்தே குருவாயூரப்பனை பக்தர்கள் தரிசிக்கும்படியும் (சித்திரை விஷு தினத்தன்று) காலைக் கதிரவனின் ஒளிக் கற்றைகள் குருவாயூரப்பன் திருவடிகளில் விழுமாறு அமைக்கப்பட்டுள்ளது.

ஆலயத்தின் கிழக்கு - மேற்கில் இரு கோபுரங்கள் உள்ளன. கிழக்கு கோபுரம் வழியே நுழைந்தால் வெளிப் பிரகாரம் தெரியும். இங்கு பொன் முலாம் பூசப்பட்ட சுமார் நூறு அடி (33.5 மீட்டர்) உயரக் கொடிமரமும் இதன் இருபுறமும் 13 அடுக்குகளுடன் 7 மீற்றர் உயரமுள்ள தீபஸ்தம்பங்களுடன் உள்ளன. இங்குதான் செண்டை மேளங்கள் முழங்க, அலங்கரிக்கப்பட்ட யானைகள் காலையில் நாராயணனை வழிபட வரிசையாக நிற்கும். வட கிழக்கே சேஷத்ர பாலர். கொடிமர மண்டபத் தூண்களின் கீழே அமர்ந்து பக்தர்கள் பாகவதம் அல்லது நாராயணீயம் படிப்பது வழக்கம். ஸ்ரீகுருவாயூர் சேஷத்ரத்தில் ஸ்ரீமத் பாகவத ஆராதனை என்று ஸ்ரீகாஞ்சி மகா பெரியவர் சொல்லியிருக்கிறார்.

மூலஸ்தானத்தின் இரு புறமும் சண்டன் பிரசண்டன் அனந்தானந்தர்கள். கருவறைப் படிக்கட்டுக்குக் கீழே இந்திரனும். மண்டபத்தில் கருடனும் தென்கிழக்கு மூலையில் அக்னியும் உள்ளனர்.

தெற்கில் கணபதி, தட்சிணாமூர்த்தி, எமன், வீரபத்ரர், விக்னேஸ்வரர், ஐயப்பன் சப்தமாதர்களும். மேற்கில் அனந்தசயனன் மற்றும் வருமணனும், வடமேற்கில் வாயு, துர்கை மற்றும் சுப்பிரமணியரும் வடக்கில் சோமன், வைச்ரவணனும், வடகிழக்கில் நிர்மால்யதாரி, ஈசானன், பிரம்மா ஆகியோரும் உள்ளனர் கிணற்றில் வருணன் உள்ளார்.

ருத்ர குளத்தில் இருந்து பகவதி சந்நிதிக்குப் பின்புறம் உள்ள சிறு வழி மூலமாகவும் சந்நிதிக்கு வரலாம். பிராகாரத்தின் தென்கிழக்கு மூலையில் கூத்தம்பலம் உள்ளது இதன். வடக்கில் தர்மசாஸ்தா மேற்கு பார்த்தபடி வீற்றிருக்கிறார்.

வடக்குப் பிராகாரம் திரும்பியதும் யானைப் பந்தல் மண்டபம் இதன் மேற்கூரையில் சிறு துவாரம் உள்ளது. இந்த மண்டபத்தில் கிருஷ்ணன் ஆட்டம் நடக்கும் ஒரு முறை கார்த்திகை மாதம் சுக்ல பட்ச ஏகாதசி அன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாரதரும் ஆதிசங்கரரும் ஆகாய மார்க்கமாகச் சென்று கொண்டிருந்தனர் அப்போது நாரதர் குருவாயூரப்பனை தரிசிக்க விரும்புவதாகச் சொன்னார் 'விக்கிரக வழிபாடு. இறைவன் நாமத்தை உச்சரிப்பது ஆகியவை தேவையில்லை' என நினைத்து, வர மறுத்தார் ஆதிசங்கரர். அதனால் அவர் இந்த இடத்தில் மூர்ச்சித்து கீழே விழுந்தார். அவர் கண் விழித்தபோது விஷ்ணு தரிசனம் கிடைத்தது.

அதனால் அங்கு 41 நாள் தங்கி, பூஜை முறைகளை வகுத்துவிட்டு, தனது பயணத்தைத் தொடர்ந்தார். அதனால்தான் அந்த துவாரம் உள்ளது. இரவில் அந்த இடத்துக்கு சீவேலி வரும்போது வாத்தியங்கள் இசைப்பதை சற்று நிறுத்தி மீண்டும் இசைப்பர்.

இந்தப் பகுதியில் வில்வமங்கள ஸ்வாமி, பூந்தானம், குரூர் அம்மா, குசேலர் ஆகியோரது சிலைகளை வைத்துள்ளனர்.

இங்குள்ள நமஸ்கார மண்டபத்தில்தான் மேப்பத்தூர் நாராயண பட்டத்திரி நாராயணீயத்தை எழுதினாராம். அறுத்துக் கெட்டபடி எனப்படும் அந்த இடத்தை இன்றும் புனிதமாகக் கருதுகின்றனர். உட்பிரகாரத்தின் கிழக்குப்புறம் மடப்பள்ளி. தென்மேற்கு மூலையில் கணபதி சந்நிதி.

வெளிப்பிரகாரம் செல்லும் வழியில் வலப்புறம் உள்ள திண்ணையில், நிருத்தம் என்ற இடத்தில் வில்வமங்கள ஸ்வாமி நிஷ்டையில் அமர்வது வழக்கம். திருப்புகை தரிசனம் முடிந்ததும் பகவான் அவருக்குக் காட்சி அளிப்பாராம். இந்த இடத்தில் வரவு செலவு கணக்குகளை வாரியர் குலத்து நபர் படிக்க, பகவான் கேட்பதாக நம்பிக்கை.

கோபுரத்துக்கு வெளியே இருக்கும் சிறு மேடைக்கு 'கல்யாண மேடை' என்று பெயர். இங்குதான் திருமணங்கள் நடைபெறும்.

ஆலயத்தின் வடமேற்கு மூலையில் குரு மற்றும் வாயு பகவானுக்கு பலி பீடங்கள் இருக்கின்றன. இவற்றை குரு மற்றும் வாயுவின் அதிஷ்டானங்கள் என்றும் சொல்வர் இங்கு அவர்களுக்கு அன்னம், பூ, தீர்த்தம் ஆகியவை நிவேதிக்கப்படுகிறது.

ஸ்ரீ குருவாயூரப்பன் கோயிலில் தீ விபத்து ஏற்பட்டபோது, அங்குள்ள மரச் சுவர்கள், தூண்கள் ஆகியன சேதமடைந்தன. பிறகு பிரஸ்னம் மூலம்கிடைத்த உத்தரவுப்படி, மறுபடியும் தூண்கள் மற்றும் சுவர்களை







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருங்கற்களால் நிர்மாணிக்க தீர்மானித்தனர். அதற்காக தமிழ்நாட்டில் இருந்து சிற்பிகள். வரவழைக்கப்பட்டனர்.

ஸ்ரீவிஷ்ணுவின் தசாவதாரங்களைக் குறிக்கும் சிற்பங்களுடன் கூடிய பத்து தூண்கள் தயாராயின. அதில் ஸ்ரீகிருஷ்ணாவதாரத்தை குறிக்க.ஒரு தூணில் 'கம்ச வத' காட்சியை வடித்திருந்தார் சிற்பி.

ஒரு நாள் சிறுவன் ஒருவன் தலைமைச் சிற்பியிடம் வந்து 'இங்கு கிருஷ்ணனை, வேணு கோபாலனாக செதுக்கியிருக்கும் தூணை வையுங்கள்!' என்றான். 'அப்படி ஒரு சிற்பத்தை நாங்கள் இதுவரை வடிக்கவில்லையே!' என்றார்.



உடனே சிறுவன் சிற்ப வேலை நடக்கும் இடத்துக்கு அவரை அழைத்துச் சென்று ஸ்ரீகிருஷ்ணர், வேணுகோபாலனாக விளங்கும் தூணைக் காட்டினான். வியப்படைந்த சிற்பி, திரும்பி பார்த்தபோது சிறுவனை காணவில்லை. வந்தது ஸ்ரீகுருவாயூரப்பனே என்பதை உணர்ந்த தலைமைச் சிற்பி, அந்தத் தூணையே அங்கு நிறுவினார். இந்தத் தூண் ஸ்ரீ குருவாயூரப்பனாலேயே படைக்கப்பட்டதாக ஐதீகம். அதன் பிறகு 'கம்ச வத' தூணை உட்பிராகாரத்தில் வைத்திருக்கிறார்கள்.

கோயிலுக்கு நேர் கிழக்கில் சற்றுத் தள்ளி அரசமரம் ஒன்றும், அதன் அடிப்புறம் சிறகு விரித்த நிலையில் கருடன் சிலை ஒன்றும் உள்ளது. இதைச் சுற்றி சிமெண்ட் மேடையும் அதன் மீது கம்பி வேலியும் அதில் இரண்டு இலை போன்ற வடிவங்களும் உள்ளன. ஜெயலலிதா இரண்டாவது தடவை ஆட்சிக்கு வந்ததும் யானை ஒன்றை இந்தக் கோயிலுக்கு வழங்கினார்.

மஞ்சுளா என்ற வாரியர் குலப் பெண் தினமும் இரவில் குருவாயூரப்பனுக்கு சார்த்த பூமாலை கொண்டு வருவது வழக்கம் ஒரு நாள் தாமதமானதால் கோயில் நடை மூடப்பட்டு விட்டது.

கலக்கமடைந்தாள் மஞ்சுளா. அப்போது அவளை ஆசுவாசப்படுத்திய பூந்தானம் அடியார் அவள் நின்றிருக்கும் ஆலமரத்தின் அடியே இறைவனின் திருவடியாக பாவித்து பூமாலையை அங்கேயே சமர்ப்பிக்கும்படி சொன்னார். மஞ்சுளா அப்படியே செய்தாள்.

மறுநாள் காலையில் மேல்சாந்தி, விக்கிரகத்தின் மீதுள்ள பூமாலைகளை அகற்றும் போது, ஒரு மாலையை மட்டும் கழற்றமுடியவில்லை. அதைக் கண்ட பூந்தானம், பக்திப் பரவசத்துடன். "மஞ்சுளாவின் மாலை என்றால் அதுவும் விழட்டும்" என்றார். உடனே மாலை கீழே விழுந்தது. அதனால். அந்த ஆலமரம் உள்ள இடம் பூஜைக்குரியதானது. அதை மஞ்சுளால் தரை என்பர். ஆண்டுதோறும் இங்கிருந்துதான் 'யானை ஓட்டப் பந்தயம் துவங்குகிறது. ஆலமரத்தின் அடியில் பருந்து சிலை ஒன்றையும் தரிசிக்கலாம்.

ஸ்ரீகுருவாயூரப்பன் கிழக்கு நோக்கி அருள்புரிவதால். இங்கு கிழக்கு வாசலே பிரதானம். கிழக்கு வாசல் வழியே மூன்றாம் கோபுரத்தைத் தாண்டிச் சென்றால். யானைப் பந்தல் என்ற பகுதியை அடையலாம். இதன் மேல் பகுதியில் புராண சம்பவங்களை விளக்கும் ஓவியங்களுடன் மகாத்மா காந்தியின் திரு உருவப்படமும் உள்ள தனிச்சிறப்பு! கர்ப்பக்கிரகத்தைச் சுற்றி அதைத் தொடாமல் இருக்கும் கட்டடங்களை நாலம்பலம் என்பர் கனபதி கோயிலையொட்டிய வட பகுதியில் பகவானுக்கான சந்தனம் அரைக்கப்படுகிறது. இதன் வட பகுதியில் மாலை கட்டுகிறார்கள்.

உட்புறத்தில் உள்ள 'அறத்து கெட்டுபடி' என்ற இடத்தில் நாராயணீயம் இயற்றப்பட்டதாம் கருவறைக்கு எதிரில் உள்ள மேடை அருகே நின்றவாறு நாராயண பட்டத்திரி, பேசியவாறே நாராயணீயம் எழுதியதாக கண்ணனிடம் சொல்லப்படுகிறது. இது மேல்பத்தூர் நாராயண பட்டத்திரி மண்டபம் என்று அழைக்கப் படுகிறது. கர்ப்பக்கிரகத்தின் வெளிப்புற மரச் சுவரில் உள்ள சட்டங்களில் சுமார் 3,000 பித்தளை அகல் விளக்குகள் பொருத்தப் பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இங்குள்ள ஆராட்டுக்குளம் எனப்படும் ருத்திர தீர்த்தம் சிறப்பு வாய்ந்தது. கோயிலின் தென்பக்கம் உள்ள வருண தீர்த்தம் எனப்படும் கிணறு மற்றொரு தீர்த்தமாகும். அபிஷேகத்துக்கான நீர் இங்கிருந்தே எடுக்கப்படுகிறது. குருவும் வாயுவும் வருணனை பூஜித்ததை அடிப்படையாகக் கொண்டு இந்தக் கிணற்றில் வருணனை ஆவாஹனம் செய்துள்ளதாக ஐதீகம். ஸ்வாமி புறப்பாட்டின்போது பரிவார தேவதைகளுக்கு நடப்பது போன்றே இந்தக் கிணற்றுக்கும் பூஜை நடைபெறும். இதன் நீர்வற்றுவதில்லை. இதற்குள் எண்ணற்ற சாளக்கிராமங்கள் இருப்பதாக நம்புகின்றனர். இதன் தீர்த்தம் நோய் அகற்றும் அருமருந்தாகவும் விளங்குகிறது. கருவறையில், அணையாமல் எரியும் நெய் விளக்கு ஒளியில் ஜோதியாக மின்னுகிறான் ஸ்ரீ குருவாயூரப்பன். குருவாயூரப்பனை, உண்ணி(குழந்தை) கிருஷ்ணன் என்கிறார்கள் பக்தர்கள்.

மேலிரு கரங்களில் சங்கு-சக்கரமும், கீழிரு கைகளில் கதாயுதம் - தாமரையும், கழுத்தில் துளசி, முத்து மாலைகள் தவழ, கிரீடம், மகர குண்டலம், கேயூரம், கங்கணம், உதர, பந்தனத்துடன் வலப்புற மார்பில் ஸ்ரீவத்ஸம் என்ற சந்தனமும், வைஜயந்தி மாலையும், கௌஸ்துபமும் அணிந்து ஸ்தானகம் எனும் நின்ற நிலையில் அருள் புரிகிறார் குருவாயூரப்பன்.

இந்த விக்கிரகம் வைகுண்டத்தில் மகாவிஷ்ணுவால் உருவாக்கி வணங்கப்பட்ட பின் பிரம்மன், கண்ணன் ஆகியோரால் பூஜிக்கப்பட்டது. இந்த விக்கிரகம் 'பாதாள அஞ்சனம்' என்ற உயர் தர கல்லில் வடிவமைக்கப்பட்டது. குருவாயூரப்பனது உற்சவர் விக்கிரகம் பொன்னால் ஆனது.

குங்குமப்பூ, கஸ்தூரி, கோரோசனை, அகோவனம், செஞ்சந்தனம் ஆகிய ஐவகைத் திரவியங்களை பன்னீரில் கலந்து அரைத்த நறுமணச் சந்தனத்தையே குருவாயூரப்பனுக்கு பூசுகிறார்கள். விடியற்காலை கருவறை திறந்தவுடன் முன்தினம் சாத்தப்பட்ட சந்தனக் கலவையைக் கண்டு களிக்கலாம் குருவாயூரப்பனுக்கு.

நல்லெண்ணெயில் தைலாபிஷேகம் செய்யப்படுகிறது. இந்த உஷத்கால பூஜையில் குருவாயூரப்பன் உற்சவ விக்கிரகம், வெளிப்பிரகாரத்தை மூன்று முறை சுற்றிக் கொண்டு வரப்படுகிறது. அந்த நேரத்தில், அஷ்டதிக்கு பாலகர்களுக்கும். குரு, வாயு பகவான் ஆகியோருக்கும், பலிபீடத்தில் அன்னம் இடப்படுகிறது. இவ்வாறு பரிவார தேவதைகளுக்குச் செய்யப்படும் வழிபாடு 'சீவேலி'' எனப்படும்.

அதிகாலையில் குருவாயூரப்பனை தரிசிப்போருக்கு கோயில் செக்கில் ஆட்டிய அபிஷேக எண்ணெயுடன் அபிஷேக தீர்த்தமும் பிரசாதமாக வழங்கப் படுகின்றன. விக்கிரகத்தில் இருந்து அபிஷேக எண்ணெயை வாகை மரப் பட்டையால் ஆன கலவையால் அகற்றுவர். இதை 'வகை சார்த்து' என்பர்.

38 லட்ச ரூபாய் பெறுமானமுள்ள தங்கப் பீடம் குருவாயூரப்பனுக்குக் காணிக்கையாக அளிக்கப்பட்டது. இதை வழங்கியவர்: கரூரைச் சேர்ந்த தங்கவேலு என்ற அன்பர். குருவாயூரப்பன் தினமும் 12 திவ்ய நாமங்களுடன் பக்தர்களை அனுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரகிக்கிறார்.

நிர்மால்ய தரிசனம் - விஸ்வரூப தரிசனம்: தைலாபிஷேகம் - வாத ரோகாக்னன்: வாகை சார்த்தல் - கோகுலநாதன்: சங்காபிஷேகம் - சந்தான கோபாலன்: பால அலங்காரம் - கோபிகாநாதன்: பால் முதலிய அபிஷேகம் - யசோதா பாலன்: நவகாபிஷேகம் - வனமாலா கிருஷ்ணன்: உச்சிகால பூஜை - சர்வாலங்கார பூஷணன்: சாயங்கால பூஜை - சாவமங்கள அத்தாழ (இரவு) பூஜை - விருந்தாவனசரன்:

பின்னர் சங்காபிஷேகம். அப்போது புருஷ ஸூக்தம் சொல்வர். கடைசியில் தங்கக் கலச நீரால் பூர்ணத் திருமஞ்சனம். பிறகு நெற்பொரி, கதலிப் பழம், சர்க்கரை ஆகியவற்றை நைவேத்தியம் செய்வர். அப்போது பகவான், உண்ணி கிருஷ்ணனாகக் காட்சியளிப்பார்.

அடுத்து உஷத் பூஜை. அப்போது நெய்ப் பாயசமும், அன்னமும் பிரதான நைவேத்தியங்கள். மீண்டும் நடை திறக்கும்போது பகவான் திருமுடியில் மயிற்பீலி, நெற்றியில் திலகம், பொன் அரைஞாண், திருக்கரங்களில் ஓடக்குழல், மஞ்சள் பட்டு ஆகிய அலங்காரங்களுடன்




திருப்பள்ளி பூஜை - சேஷசயனன்.

ஆதிசங்கரர் வகுத்த பூஜை முறைப்படி அதிகாலை மூன்று மணிக்கு நாதஸ்வரம் மற்றும் சங்கு முழங்க, குருவாயூரப்பனைத் திருப்பள்ளிஎழச் செய்வர். இப்படி காட்சி கொடுப்பதற்கு நிர்மால்ய தரிசனக்காப்பு, ஆடை, ஆபரணங்கள், மாலைகள் ஆகியவற்றைக் களைவர். நிர்மால்ய தரிசனம் காண்பது பெரும் புண்ணியம்!

தொடர்ந்து விஸ்வரூப தரிசனம். அடுத்து தைலாபிஷேகம். அதன் பிறகு திருமேனியை வாகைத் தூள் சாற்றி எண்ணெய் களைவர்.

அற்புதமாகக் காட்சி கொடுப்பார். இத்தனை பூஜைகளும் காலை ஆறு மணிக்குள் நடைபெறும்.

உச்சி பூஜையின்போது 'சீவேலி' உற்சவம் நடைபெறும். யானை மீது சீவேலி மூன்று முறை பிராகாரத்தை வலம் வருகிறது. முதல் வலத்தின்போது பரிவார தேவைகளுக்கு அன்ன பலி இடுவர். அடுத்து பால் அபிஷேகம். 9 மணிக்கு வெள்ளிக் கலச தீர்த்தத்தால் அபிஷேகம். இதை நவகாபிஷேகம் என்பர். தொடர்ந்து பந்தீரடி பூஜை இதை வேதம் ஓதும் நம்பூதிரிகள் (ஓதிக்கன்மார்) செய்வர். அப்போது சாதமும், சர்க்கரைப் பாயசமும் பிரதான நைவேத்தியங்கள் சுமார் 11.30

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# TIP TOP TRAVELS & TOURS



## TIP TOP
### TRAVELS & TOURS
**LUXURY BALLOON & SEMI LUXURY BUSES**

- Adjustable Seats
- TV / DVD
- Daily Service
- AC / Non AC

### TIP TOP GUEST HOUSE HOLIDAY BUNGALOW

- Comfortable Rooms • Attached Bathrooms,
- Hot Water • Fully Furnished

### TIP TOP GUEST HOUSE
34/2, Church Road, Nuwara-Eliya. Tel: 052 2235742

- Comfortable Rooms with Food,
- Attached Bathrooms • Hot Water Heater,
- Function Hall • Wedding Hall • Restaurant

24 hrs Service

0112 361144, 2364999

பிரயாணத்தில் மாற்றம் இருப்பின் 6 மணித்தியாலங்களுக்கு முன் அறிவிக்கவும் யாழ்ப்பாணத்தில் ஆசனப்பதிவுகளுக்கு

**TIP TOP TRAVELS & TOURS**

வின்சர் தியேட்டர், வின்சர் சந்தி கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

Mob: 0777 351 588, 021 790 30 73, 077 3236354



**A/C Ballon Bus 1035/=**

## TIP TOP TRAVELS & TOURS
# 296/A1, Galle Road, Wellawatte.
Office Tel: 0777 351 644, 0773 236 354
0112 361144, 2 364999


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பு "அபிநயக்ஷேத்ரா" நடனப்பள்ளி இயக்குனர் பரத, மிருதங்க கலா வித்தகர் செல்வி. திவ்யா சிவநேசனின் மாணவியும், திரு.கணேஷன், திருமதி. கோமதி கணேஷனின் புதல்வியுமான செல்வி. சக்தீஷ்வர்யா வின் பரத நாட்டிய அரங்கேற்றம் 18-09-2011 பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் மாலை 5.30க்கு நடைபெறவுள்ளது. இதற்கு பிரதம விருந்தினராக பிரபல நாட்டிய தாரகை "நாட்டிய கலா சிரோன்மணி" ஸ்ரீமதி பிரகா பேஸெல் அவர்கள் சென்னையிலிருந்து வருகை தந்து சிறப்பிப்பதுடன், பிரபல்யம் வாய்ந்த இந்தியக் கலைஞர்கள் அணிசேர்க் கலைஞர்களாகப் பங்கேற்கிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கௌரவ விருந்தினர்:

கம்பவாரிதி.E.ஜெயராஜ்

சிறப்பு விருந்தினர்:

ஸ்ரீமதி. பத்மா கஜேந்திரதாஸ் (அதிபர் இந்து மகளிர் கல்லூரி)

டாக்டர் K.N. ஸ்ரீனிவாசன் M.B.B.S, D.M.R.T.D.R.M (திருச்சி- இந்தியா)

திரு.S.சிவநேசன் (நிர்வாக இயக்குனர்-SIVANESAN GROUP OF COMPANIES, சென்னை - இந்தியா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# S.K TAILOR

**Specialist for Saree Blouses**
**(Indian Cutting)**

- Shalwar Kameez
- All Kinds of Outfits
- Saree Tassels Work
- Saree Pressing





7- 4/A Orchard Complex, Galle Road, Wellawatte.
Tel: 011 4988416 | Mob: 077 9851719,077 8577754



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிக்கு நைவேத்தியம் பால் பாயசம். 12.30 முதல் 4.30 மணி வரை கோயில் நடை சாத்தப்படும்

மாலை நடை திறந்ததும் சீவேலி இரவு 8 மணிக்கு அத்தாழ பூஜை. அப்போது நெய் அப்பம், இலை அடை, பால் பிரதமன் ஆகியேவை நைவேத்தியங்கள். இந்த பூஜைக்குப் பிறகு அத்தாழ சீவேலி. பிறகு சுற்று விளக்கு பிரார்த்தனை எரிய, பஞ்ச வாத்தியங்கள் முழங்க, மூன்று அல்லது ஐந்து யானைகளுடன் பக்தர்களும் வலம் வருவர்.



குருவாயூர் கோயிலில் சாயங்காலம் மட்டுமே தீபாராதனை. ஏழு அடுக்கு விளக்கு, ஐந்து திரி, நாகபட விளக்கு, ஒற்றைத் திரி விளக்கு என்று பல விளக்குகளை ஏற்றி ஆராதிக்கிறார்கள். இறுதியில் கற்பூர ஆரத்தி. அப்போது முப்பத்து முக்கோடி தேவர்களும் ஸ்ரீகுருவாயூரப்பனை வழிபடுவதாக ஐதீகம். குருவாயூர் கோயிலில் மேல்சாந்தி, கீழ்சாந்தி மற்றும் தந்திரிகள் என்று பூஜை செய்யும் அர்ச்சகர்களை வகைப்படுத்தியுள்ளார்கள்.

மேல் சாந்தி: தலைமை குருக்கள். இவர் முக்கிய பூஜைகள், அலங்காரம், அர்ச்சனை மற்றும் அபிஷேகங்களை செய்பவர். இவரைத் தவிர மற்றவர்களுக்கு மூல விக்கிரகத்தைத் தொடும் உரிமை கிடையாது. இவர் கடும் விரதங்களைக் கடைப்பிடிக்க வேண்டும். மேல்சாந்தி ஆறு மாத காலம் மட்டுமே பணி புரிய முடியும் இந்தக் கால அளிவில் அவர் கோயிலை விட்டு வெளிவரச் கூடாது. கோயிலில் அவர் தங்கியிருக்க தனி இடம் உண்டு. கடல் தாண்டி பயணம் செய்தவர்கள் மேல்சாந்தியாக பணி புரிய இயலாது.

கீழ்சாந்தி: உதவி அர்ச்சகர்கள். விளக் கேற்றுவது. அபிஷேக நீர் மற்றும் மலர் மாலைகள் எடுத்துக் தருவது. நைவேத்தியம் தயாரிப்பது ஆகியவை இவர்களது வேலை. பரம்பரையாக வாரிசு உரிமை பெற்றவர்களே இதற்கு நியமிக்கப்படுவார்கள்.

தந்திரி: இவர்களும் வேதங்கள் கற்றவாக்ளே. பூஜைகளை தந்திரி ரூபத்தில் செய்வதால் 'தந்திரிகள்' எனப்படுகின்றனர். பூஜை, திருவிழா, உற்சவங்களுக்கு நாள் நட்சத்திரம் தீர்மானிப்பவர்கள் இவர்களே. சிக்கலான விஷயங்களை பிரஸ்னம் பார்த்துத்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தீர்மானித்து பரிகாரம் சொல்வதும் இவர்களே. இங்கு தந்திரிகளாகும் உரிமை, சென்னமனா எனும் பரம்பரையையே சேரும்.

மாரார்: செண்டை, மேளம் ஆகியவற்றை வாசிப்பவர்கள் மாரார் எனப்படுவார்கள்.
பதியார்: குருவாயூரப்பனுக்கு பூமாலை கட்டுவதற்கு உரிமையுடைய இவர்களை 'மூஸி' என்றும் குறிப்பிடுவர்.

குருவாயூர் கிருஷ்ணனை தரிசித்த பின், அருகில் உள்ள மம்மியூர் சென்று, அங்கு எழுந்தருளியிருக்கும் சிவன் - பார்வதியை வழிபட்டால் மட்டுமே குருவாயூர் தரிசனம் முழுமை பெறும் என்பது ஐதீகம்.

ஆண்கள் மேல் உடை இல்லாமல் வேட்டியுடனும், பெண்கள் தங்களது கலாசார உடைகளை அணிந்தும் குருவாயூரப்பனை தரிசிக்கச் செல்ல வேண்டும்.

நடை மூடும் முன் எட்டு வகை மூலிகைகளால் ஆன தீபத்தூள் கொண்டு திருப்புகை காட்டப்படும். இதற்கு கிருமிகளை அழிக்கும் வல்லமை உண்டு.

பக்தர்கள் கொண்டு வரும் பூமாலைகளை சந்நிதிக்கு முன் பலிபீடத்துக்கு மேலே இருக்கும் கொடியில் தொங்க விடுகிறார்கள்.

புதுமண ஜோடிகளையும் ஒட்டியுள்ள நாலம்பலத்துக்குள் அனுமதிப்பதில்லை அப்படியும் அசுத்தம் ஏற்பட்டால், புண்யாகம் செய்வதற்கான கட்டணம் வசூலிக்கப் படுகிறது.

தங்கக் கலசங்களில் நிரப்பிய புனித நீரால் பிரம்ம கலச மந்திரம் சொல்லிக் கொண்டு தினசரி கும்பாபிஷேகம் செய்யப்படுவது இந்த ஆலயத்தின் சிறப்பு.

இங்கு சந்நிதியில் பிரசாதம் தரப்படுவதில்லை. வடக்குப் பிராகாரத்தில் மட்டுமே சந்தனம் போன்ற பிரசாதங்களைத் தருவார்கள்.

ஸ்ரீகுருவாயூரப்பனுக்கு பாயசம் நிவேதிக்க மாதம் ஒன்றுக்குத் தேவைப்படும் சர்க்கரை, ஐந்து டன்னுக்கும் அதிகம் என்கிறார்கள்.

குருவாயூர் கோயிலில் கணபதி, சாஸ்தா, இடத்து அரிகத்து பகவதி ஆகிய உபதேவதைகள் தரிசனம் தருகிறார்கள். இதில், இடத்து அரிகத்து பகவதிக்கு ருத்ர தீர்த்தக் கரையிலும் தனிக் கோயில் உண்டு. இவளுக்கு சுத்தமான துணியைத் திரியாக உருட்டி, எண்ணெயில் தோய்த்து தீபமேற்றி, அரிசி, தேங்காயை நைவேத்தியம் செய்து வழிபடுகிறார்கள். இதை, அழல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நைவேத்தியம் என்கிறார்கள்.

குருவாயூர் கோயில் நிர்வாகத்தால் கல்லூரி, பள்ளி, நர்சரி பள்ளி, ஆங்கில மீடியம் பள்ளிக்கூடம், வாத்திய இசை, கலைப்பள்ளி, சிற்பக் கலைப் பள்ளி ஆகியவை நடத்தப்படுகின்றன.

குருவாயூரில் துலாபாரம் பிரசித்தமானது. தங்களது வேண்டுதலையொட்டி எடைக்கு எடை தங்கம், வெள்ளி, நாணயங்கள், பழங்கள், சர்க்கரை, கரும்பு, வெண்ணெய், பன்னீர், தேங்காய், வாழைப்பழம் ஆகியவற்றை பக்தர்கள் வழங்குகின்றனர். சொறி, சிரங்கு போன்ற தோல் நோய் பீடிக்கப்பட்டவர்கள், இங்கு எடைக்கு. எடை சேனைக் கிழங்கை காணிக்கை செலுத்துகிறார்கள்.

பக்தர் ஒருவர் வாழைப் பழங்களை துலாபாரம் செலுத்தச் சென்றார். அப்போது அவர் கட்டியிருந்த பட்டு வேஷ்டி வீணாகிவிடும் என்பதால் வேறு வேஷ்டியைக் கட்டச் செய்தார் அவரின் தாய்.

வாழைப் பழங்கள் எவ்வளவு வைத்தும் தராசுத்தட்டுகள் சமமாகவில்லை. அனைவரும் திகைத்தனர். அர்ச்சகர் ஒருவர். பக்தரது பட்டு வேஷ்டியையும் தராசில் வைக்கச் சொன்னார் பின்னரே தட்டு சமமாயிற்று!

இங்கு பிற மதத்தவரும் துலாபாரம் செலுத்துகிறார்கள். 1969-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 24-ம் தேதி ஸ.்.பியா என்ற முகமதியப் பெண்ணுக்காக துலாபாரம் செய்து பிரார்த்தனையை நிறைவேற்றினர்.

ஸ.்.பியாவுக்கு. முன்பு பிறந்த குழந்தைகள் பத்து பேர் இறந்துவிட்டதால் அவள் பெற்றோர், 11-ஆவது குழந்தைக்காக குருவாயூரப்பனை வேண்டினர் அப்படிச் செய்த துலாபாரமே இது.

1971-ம் ஆண்டு மார்ச் மாதம் கொச்சப்பன் என்ற கிறிஸ்தவ இளைஞருக்கு திடீரென்று பார்வைக் கோளாறு ஏற்பட்டது அவர் குருவாயூரப்பனுக்கு எடைக்கு எடை தேங்காய் அளிப்பதாக வேண்டிக் கொண்டார். வேண்டுதல் நிறைவேறியதும் அவர் துலாபாரம் நிகழ்த்தினார்.

எல்லா நாட்களிலும் இங்கு அன்னப்பிராசனம் எனப்படும் சோறு ஊட்டும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. குழந்தை இல்லாதவர்கள் தங்களுக்குக் குழந்தை பிறந்தால். இங்கு வந்து சோறு ஊட்டுவதாக வேண்டிக் கொள்கிறார்கள். வேண்டுதல் நிறைவேறியதும் இந்தப் பிரார்த்தனையை நிறைவேற்றுகின்றனர். தவிர குருவாயூரப்பனின் சந்நிதியில் சோறு ஊட்டினால். குழந்தைகள் நோய்நொடி இன்றி ஆரோக்கியமாக வளர குருவாயூரப்பன் அருள் புரிவான் என்பது அசைக்க முடியாத நம்பிக்கை. அடிமை கிடத்தல்: குழந்தைகளை பகவானின் குழந்தையாக பாவித்து. நடையில் கிடத்திவிட்டுத் திரும்புவர். பின் மற்றொருவர் மூலமாக குழந்தையை எடுத்து வரச் செய்வர். அதற்கான காணிக்கையை உண்டியலில் செலுத்துவர். இதற்கு அடிமை கிடத்தல் அல்லது நடை தள்ளுதல் என்று பெயர்.

ஆள் ரூபம்: அங்கங்களில் நோய்நொடி உள்ள பக்தர்கள் தங்களது குறை தீர்ந்தால் குறிப்பிட்ட கண், கை, கால் போன்ற அங்கங்களை மரம், வெள்ளி மற்றும் தங்ம் போன்றவற்றில் செய்து சமர்ப்பிப்பதை ஆள் ரூபம் சமர்ப்பித்தல் என்பர்.

குந்துமணி: மூலவருக்கு முன்புறம் தென் பகுதியில் வாணலி போன்ற பெரிய பாத்திரத்தில் குந்துமணிகள் இருக்கும்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பராமரிப்புக்கும் காணிக்கையாளர் குறிப்பிட்ட தொகையைச் செலுத்த வேண்டும்.

பக்தர்கள் உண்டியலில் காணிக்கை செலுத்திய பின், தங்கள் குழந்தைகளை அந்த குந்துமணிகளை வாரி எடுத்து, மீண்டும் அதிலேயே போடச் செய்வர். இதனால் குழந்தைகள் துறுதுறுப்புடன் திகழ்வர் என்பது ஐதீகம்.

திருவிழாவுக்காக கொடியேற்றியதும் கிழக்குக் கோபுரத்துக்கு முன்பாக யானைகள் வரிசையாக நிறுத்தப்பட்டு ஓட்டப் பந்தயம் தொடங்குகிறது. முதலில் ஓடி வந்து கொடிமரத்தை தொடும் யானை, 10 நாள் திருவிழாவிலும் ராஜ மரியாதையுடன் நடத்தப்படுகிறது. தவிர, இந்த யானைக்கு கிருஷ்ண விக்கிரகத்தை தன் மேல் ஏற்றிக்கொண்டு வலம் வரும் பாக்கியமும் கிட்டும்.

குருவாயூர் கோயிலுக்கு யானையை காணிக்கை அளிக்க விரும்பினால், கோயில் நிர்வாகத்துக்குக் கடிதம் எழுத வேண்டும். கோயில் அதிகாரிகள் தரும் படிவத்தைப் பூர்த்தி செய்து, தேவையான ஆவணங்களைக் கொடுக்க வேண்டும் யானை எங்கு வாங்கப்பட்டது என்ற விவரத்துடன் அந்த மாநில வனத் துறையினரின் சான்றிதழ் மற்றும் நோ அப்ஜக்ஷ்ன் சர்டிபிகேட் ஆகியவற்றைச் சமர்ப்பிக்க வேண்டும். அதிகாரிகளது பரிசீலனைக்குப் பிறகு காணிக்கையாளர், கால்நடை டாக்டர்கள் இருவர், யானைக்கான நாட்டு வைத்தியர் ஒருவர் ஆகியோரை, தனது செலவில் யானை இருக்கும் இடத்துக்கு அழைத்துச் செல்ல வேண்டும். அவர்கள் யானையை சோதிப்பார்கள். பிறகே, காணிக்கை கொடுக்கப்பட்ட யானையின்

தற்போது குருவாயூர் கோயிலில் 20 கொம்பன் (ஆண்) யானைகள் உட்பட சுமார் 64 யானைகள் உள்ளன. ஜெயலலிதா வழங்கிய ஜெயகிருஷ்ணா என்ற யானையும் அதில் அடங்கும்.

குருவாயூரிலிருந்து சுமார் 3 கி.மீ தொலைவில் உள்ள புன்னத்தூர் கோட்டையில் சுமார் 100 ஏக்கர் பரப்பளவுள்ள 'யானைகள காப்பகம்' உள்ளது. அங்கு எல்லாம் யானைகளையும் ஒரே இடத்தில் பார்ககலாம். இங்குள்ள ஒவ்வொரு யானைக்கும் முறையான மருத்துவப் பரிசோதனைகள் செய்யப் படுகின்றன.

கம்பீரமான பத்மநாபன் என்ற யானை குறித்து பல கதைகள் உண்டு. நீண்ட காலம் குருவாயூரப்பனுக்குச் சேவை செய்த இந்த யானை 1931ல் நாராயணன் திருவடிகளை அடைந்தது.

மற்றொரு யானை கஜராஜன் என போற்றப்பட்ட கேசவன். இது, நிலம்பூர் ராஜாவால் குருவாயூர் கோயிலுக்கு தரப்பட்டது. 1922-ம் ஆண்டு ஜனவரி மாதம் 4-ம் தேதி கேசவன் குருவாயூருக்கு வந்தபோது அதன் வயது பத்து 54 ஆண்டுகள் தினமும் குருவாயூரப்பனை சீவேலி நேரத்தில் சுமந்து வந்து யானை இது.

குருவாயூர் கோயிலில் தீ விபத்து ஏற்பட்டபோது கேசவன் யானை கோயில்மணியை அடித்து ஊர் மக்களைக் கூட்டி தீயை அணைக்கச் செய்தது.

கேசவன் ஒருபோதும் முரட்டுத்தனமாக நடந்து



குந்துமணி பாத்திரம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டதில்லை. 1973-ல் கேசவனுக்கு ஆலய நிர்வாகம் 'கஜராஜன்' பட்டம் வழங்கியது 1976 டிசம்பர் 2-ம் நாள் குருவாயூர் ஏகாதசி அன்று 72 வயதான கேசவன். இறைவனை தரிசித்தபடி அதன் தும்பிக்கை சந்நிதியை நோக்கியவாறே உயிர் துறந்தது. அதன் நினைவாக 'பஞ்சஜன்யம்' தங்குமிடம் அருகில் 12 அடி உயர கான்கிரீட் சிலை நிறுவப்பட்டது. ஆண்டுதோறும் கேசவனது நினைவு நாளில் கோயிலின் எல்லா யானைகளுக்கும் விசேஷ உணவு அளிக்கப்படுகின்றன.



கார்த்திகை (விருச்சிக/நவம்பர் மத்தியில்) 1-ம் தேதி மண்டலம் துவங்குகிறது. இந்த 41 நாளும் கொண்டாடப்படுவது மண்டல விழா. கார்த்திகை 28-ம் நாள் நாராயண பட்டத்திரி, நாராயணீயத்தைப் பாடிய நன்னாள். இதை நாராயணீய தினமாகக் கொண்டாடுகிறார்கள்.

செம்பை வைத்தியநாத பாகவதர் தனது இறுதிக்காலம் வரை ஏகாதசி நாட்களில் குருவாயூரில் கச்சேரி நடத்தி வந்துள்ளார். அவரது நினைவாக ஆண்டுதோறும் 15 நாட்கள் இங்கு சங்கீத உற்சவ விழா நடக்கும். இதை செம்பை இசை விழா' என்கிறார்கள். சித்திரை முதல் தேதி (விஷு) குருவாயூரில் மிக முக்கியமான நாள். அன்று விடியற்காலை விஷு கணி காண்பது சௌபாக்கியம் தரும் அன்று தாம்பாளத்தில் தங்கம், அரிசி, காய்கறி, பழங்கள், குங்குமம், கொன்றைப் பூ, கண்ணாடி ஆகியவை திருச்சந்நிதியில் வைக்கப் படுகின்றன.

குருவாயூர் கோயிலில் நடைபெறும் லட்ச தீபத் பெரு விழாவின் 19 நாட்களிலும் ஒவ்வொரு நாள் விளக்கேற்றும் பொறுப்பை ஒவ்வோர் உள்ளூர் அமைப்பும் ஏற்றுக் கொள்கிறது.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருவாயூர் கோயிலின் உள்ளே அனுமதிக்கப்படும் ஒரே கலை நிகழ்ச்சி கிருஷ்ணன் ஆட்டம். இரவில் சீவேலி முடிந்ததும் சுமார் பத்து மணிக்குத் தொடங்கும் இந்த நாட்டிய நாடகம் இரவு 2 மணி வரை நடக்கும். இது 12-ம் நூற்றாண்டைச் சார்ந்த ஜயதேவரின் கீத கோவிந்தத்தை அடிப்படையாக வைத்து அமைக்கப்பட்டது. கோயிலை நிர்வகித்த சாமூதிரி மன்னர்கள் தினமும் கீதகோவிந்தத்தை ஆலயத்தில் வாசிக்கச் செய்தனர். அதன் தொடர்ச்சியே இந்த கிருஷ்ணன் ஆட்டம் என்கிறார்கள்.

மார்கழி மாதம், முதல் புதன் கிழமையை குசேலர் தினமாக (ஸ்ரீகிருஷ்ணன் குசேலருக்கு அனுக்கிரகம் செய்த நாள்) கொண்டாடு கிறார்கள்.

அன்று பக்தர்கள் இலையில் அவல், அச்சுவெல்லக்கட்டி ஆகியவற்றுடன் சந்நிதிக்கு வந்து தொழுவது வழக்கம். அன்று பக்தர்கள் படிக்கணக்கில் அவல் தானம் செய்கின்றனர்.

நாராயண பட்டத்திரியிடம் வந்த குட்டப்பன் தன்னை சீடனாக ஏற்றுக்கொள்ளும்படி கேட்டான் 'உன்னை சீடனாக ஏற்க முடியாது.



பொன் வேயப்பட்ட கருவறை விமானம்

வேண்டுமானால் சமையல் மற்றும் பூஜைக்கு உதவி செய்! என்றார் பட்டத்திரி. குட்டப்பன் ஒப்புக் கொண்டான்.

ஒரு நாள் "குருவே! தினமும் குருவாயூரப்பா... குருவாயூரப்பா என்று கோயிலுக்குச் செல்கிறீர்களே... அவர் யார்? என்று கேட்டான் குட்டப்பன். "அது ஒரு எருமை மாடு... போ!" என்று கோபத்துடன் சொன்னார் நாராயண பட்டத்திரி. அன்று முதல் எருமையைப்



பார்க்கும் போதொல்லாம் 'குருவாயூரப்பா! என்று வழிபடத் தொடங்கினான் குட்டப்பன்.

ஒருமுறை திருவிழாவின்போது தன்னையும் கோயிலுக்கு அழைத்துச் செல்லுமாறு குருவிடம் வேண்டினான் குட்டப்பன். பட்டத்திரி அழைத்துச் சென்றார். அன்று உற்சவர் திருவீதி உலா.

உலாவுக்காக விக்கிரகத்தை வெளியே எடுக்க முடியவில்லை. கோயில் நிர்வாகிகள் பல முறை முயன்றும் பயன் இல்லை.

அப்போது குட்டப்பன். "ஸ்வாமி... அந்த எருமை மாட்டின் வலப் பக்கம் கொம்பு இடிக்கிறது. அதனால்தான் இந்த சிக்கல்! என்றான். இதைக் கேட்ட குரு அவனைக் கடிந்து கொண்டார். ஆனாலும் குட்டப்பன் விடாமல், "சுவாமி, நன்றாக உற்றுப் பாருங்கள்!" என்றான் பட்டத்திரி ஊன்றி கவனித்தார். அப்போது அவருக்கு எருமை மாடாகவே காட்சியளித்தார் குருவாயூரப்பன். திகைத்த பட்டத்திரி, குட்டப்பனின் காலில் விழுந்து "இன்று முதல் நீதான் என் குரு!" என்று வணங்கினார். (இந்த நிகழ்ச்சியை வேறு விதமாவும் கூறுவது உண்டு)

"ஞானப்பானை" என்ற பக்தி நூலை இயற்றிய பூந்தானம், மாதந்தோறும் சுமார் 100 கி.மீ தூரம் காட்டு வழியே நடந்து வந்து குருவாயூரப்பனை தரிசிப்பது வழக்கம். அப்படி ஒரு முறை அவர் வரும்போது, திருடர்கள் சிலர் அவரை வழிமறித்தனர். 'குருவாயூரப்பா! என்று அழைத்தவாறு மயங்கி விழுந்தார்.

அவர் கண்விழித்தபோது, 'மாங்காட்டு அச்சன்' என்பவர் திருடர்களிடமிருந்து தன்னைக் காப்பாற்றி வாளுடன் நிற்பதைக் கண்டார். அதற்குக் கைம்மாறாக தன் கையிலிருந்த மோதிரத்தை மாங்காட்டு அச்சனுக்கு அளித்தார் பூந்தானம். மறுநாள் குருவாயூரப்பன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சந்நிதிக்கு நிர்மால்ய தரிசனத்துக்கு வந்தபோது, அவர் மாங்காட்டு அர்ச்சனிடம் அளித்த மோதிரம் குருவாயூரப்பன் விரலில் இருப்பதை கண்டார். குருவாயூரப்பனே தன்னைக் காப்பாற்றி யிருக்கிறார் என்பதை உணர்ந்த பூந்தானம் நெகிழ்ந்தார்.

குருவாயூரப்பன் தமிழகத்தில் பரவலாக அறியப்படுவதற்குக் காரணமானவர் அனந்தராம தீட்சிதர். ஒரு முறை அவர் நோயால் பீடிக்கப்பட்டு உபன்யாசம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. அவர் சிறிது காலம் குருவாயூரில் தங்க குருவாயூரப்பனை வழிபட்டதால் நோய் நீங்கப்பெற்றார். இதனால் தனக்கு அருளிய குருவாயூரப்பன் மகிமையை அவர் உலகறியச் செய்தார்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அக்டோபர்
## மாதத்திற்கான
## விளம்பரங்கள் தற்போது ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.




எம்மை தொடர்புகொள்ள:

***Flex Publications***

**04, IBC Road Wellawatte, Colombo 6. Tel:0777 614 186**

# EXON COLLEGE
Soaring to Excellence...

## SUCCESS GUARANTEED!
Our Success Guarantee gives you a Free retake of subject & cash back if you don't pass first time.

## CIMA



- Special Discounts for special achievements.
- Introducing a friend and get 20% off entire course fee.
- Cash back: if you don't pass first time.

## Why EXON COLLEGE?
- Dedicated and inspirational tutor support and keep you on track up until your exam, focusing on high pass rate.
- Small class size contain an average of fifteen students to ensure superior level of academic contact & support.
- Individual attention towards each students by giving more time in class.
- Comprehensive syllabus coverage and discussion of past papers to maximise your chance. of first time pass.
- Tutors support 24 / 7 home or mobile phone & email.

## Our Calibre of Lecturers

**Yazier Arafath** - CIMA passed finalist
Yazier is currently the director of of Exon College and is also a part of the lecture panel. Yazier has always seen to his students' success and has been always dedicated throughout his lecturing years. Currently he is reading for his CFA. Yazier has 3 years experience in lecturing for CIMA.

**Srinath Fernando** - B.Com ( Special) MBA
A former lecturer in ABS having a knowledgeable platform on the subject matter ensuring every edge is sharpened with his lecturing skills. Most of his students have recommended him for his impeccable teaching skills. Srinath has been lecturing for 5 years consecutively and has produced very high pass rates!

**Shiromi De Silva** Dip in HRM (UK) Attorney-at-law



## Exon College of Professional Studies (PVT) LTD.
No. 249 3/1 Hospital Road, Kalubowilla, Dehiwala.
Tel : 0777594822 / 011 2765060 E - Mail : exon_college@hotmail.com.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ கதிர் வேலாயுத சுவாமி கோவில்



**105, ஸ்ரீ கதிரேசன் வீதி, கொழும்பு – 13.**

ஆலய அமைப்பு

கொழும்பு மாநகரில் 105 ஆம் இலக்க ஸ்ரீ கதிரேசன் வீதி, கொழும்பு 13 இல் ஸ்ரீ கதிர் வேலாயுத சுவாமி கோவில் அமைந்துள்ளது. மூலஸ்தானத்தில் ஐம்பொன்னாலான கதிர்வேல் பித்தளைப் பீடத்தில் பொருத்தப்பட்டு சூக்கும இலிங்கமாகக் காட்சியளிக்கின்றது. மூன்று தளம் அமைந்த இராஜகோபுரம் தூல இலிங்கமாய் கவின்மிகு காட்சியை வழங்கிக் கொண்டிருக்கின்றது.

ஆலயம் வடக்குத் தெற்காக 45 அடியும் கிழக்கு மேற்காக 90 அடியினையும் கொண்டு விளங்குகின்றது. மூலஸ்தானம் 11 இற்கு 7 ஆகவும் பலிபீடம் 6 இற்கு 2 ஆகவும் அமைந்துள்ளது. பலிபீடத்தில் மயூரம் கம்பீரமாகக் காட்சி தருகின்றது. துவஜஸ்தம்பம் இருக்கின்றது. (21/2' x 21/2') அதன் அடியில் மூலாதார கணபதி காணப்படுகின்றார்.

இடமிருந்து வலமாக உள்வீதி 80 யார் சுற்றளவு கொண்டுள்ளது. பரிவார தெய்வங்களாக நிருதி மூலையில் கணபதி, சிவலிங்கம், இராஜராஜேஸ்வரி, கஜலஷ்மி, ஸ்ரீதேவி பூதேவி ஸமேத மஹாவிஷ்ணு, வடக்கில் சண்முகர், நடேசர், உற்சவ விநாயகர், முத்துக்குமாரசுவாமி, சண்டேஸ்வரர், நவக்கிரகம், பைரவர், நாகதம்பிரான் மூர்த்தங்கள் உள்ளன. எழுந்தருளித் திருமேனிகளாக, உற்சவ விநாயகர், நாகதம்பிரான், பைரவர், முத்துக்குமராசுவாமி காணப்படுகின்றனர்.

ஆலய உபயோகத்திற்குத் திருமஞ்சனக் கிணறு உண்டு.

ஆலய வளவில் பணியாட்கள் தங்கும் விடுதி, வாகனசாலை, தேர்முட்டி முதலியன அமைந்துள்ளன.

இங்கிலாந்திலிருந்து 1993இல் தருவிக்கப்பட்ட வெண்கலத்தாலான கண்டாமணி, மின்சாரத்தால் இயக்கப்படுகின்றது.

பூஜை ஒழுங்குகள்

அன்றாடம் ஆறுகால பூஜைகள் காலை 6.00 மணி: 7.30: 11.00: மாலை 5.00 மணி: 6.00: 8.00 மணி அர்த்தஜாம பூஜையுடன் நிறைவுறும்.

மாதாந்தக் கார்த்திகை, சதுர்த்தி, ஷஷ்டி, விசாகம், ஏகாதசி, அனுஷம் போன்ற நாட்களிலும் விஷேட திருவிழாக்கள் நடைபெறுகின்றன.

ஆலய பூஜையை சிவாச்சாரியப் பெருமக்கள் செய்கின்றனர். மண்டப ஐயர், அந்தணப் பரிசாரகர், கணக்கப்பிள்ளை, பணியாட்கள் பணி செய்கின்றனர்.

நாளாந்த பூஜைக்குச் சர்க்கரைப் பொங்கலும் விஷேட பூஜா காலங்களில் சர்க்கரைப் பொங்கள், கண்டல் போன்றவை நிவேதிக்கப் படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஷேட தினங்களில் பெருமானுக்கு ஸ்நபனாபிஷேகம், சங்காபிஷேகம் இடம் பெறுகின்றன.

தீபாராதனைக்கு சோடஷோபசாரங்களும் விசேஷ தீபங்கள் அனைத்தும் உண்டு.

பூசகர்களுக்கு மாத வேதனம் தட்ஷணை, விசேஷ காலங்களில் அதற்கான தட்ஷணைகள்வழங்கப்படுகின்றன.

இக்கோயிலில் நேர்த்திக் கடன்களாக சோறு ஊட்டுதல், காது குத்துதல், ஏடு தொடக்குதல், நவக்கிரஹ சாந்தி, அபிஷேகம் போன்றவை இடம்பெறுகின்றன. அனைத்தையும் ஆலய சிவாச்சாரியர்கள் ஏற்று நடத்துகின்றனர்.



திருவிழாக்கள்

வைகாசி மாதம் 10 நாட்கள் மஹோற்சவத் திருவிழா கணபதி ஹோமம், கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகி அபிஷேகம், வசந்த மண்டப பூஜை, வாகனோற்சவம், தேர் தீர்த்தம், கொடியிறக்கம், திருக்கல்யாணம், பூங்காவனம், பைரவர் பூஜையுடன் பதினான்கு நாட்கள் நடைபெறும். வருடாந்தத் திருவிழாவைத் தவிர ஆடி அமாவாசையில் ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி தேரில் எழுந்தருளி முகத்துவாரம் சிவன்கோயிலுக்குச் சென்று சங்கமத் துறையில் தீர்த்தம் கொடுத்தருவார். வரலஷ்மி விரத பூர்த்தியிலும் தேர்பவனி நடைபெறும்.

தீர்த்தோற்சவம் ஆலய திருமஞ்சனக் கிணற்றிலேயே இடம்பெறுகின்றது.

இவ்வாலயத்திற்கெனத் தேர், மூஷிகம், ரிஷபம், சிம்மம், பத்மம், குதிரை, ஆட்டுக்கடா, கைலாச வாகனம், கருடன், மயில் மற்றும் சகடையும் உள்ளன. இவைகள் அனைத்தும் வாகனசாலைகளிலும் தேர்க்கொட்டகை அமைத்தும் செவ்வையாகப் பராமரிக்கப் படுகின்றன.

வாகனங்கள் கோயில் மூலமாகவும் நேர்த்திக்கடன் செலுத்தும் அடியார்கள் மூலமும் பெறப்பட்டவையாகும்.

மஹோற்சவத்தைத் தவிர ஆனி உத்தரம், மார்கழி திருவாதிரை, திங்கள் தோறும் வரும் பௌர்ணமி, சதுர்த்தி, கார்த்திகை போன்ற நாட்களிலும் நவராத்திரி, பிள்ளையார் கதை, கந்தசஷ்டி போன்ற திருவிழாக்களும் நடைபெறுகின்றது.

கந்தசஷ்டியில் சூரசம்ஹாரமும் நவ ராத்திரியில் மகிஷாசுர சம்ஹாரமும் சிறப்பாக நடைபெறுகின்றன.

இவ்வாலயத்திற்கெனத் திருமண மண்டபம் ஒன்றும் உண்டு. சைவசமய ஆசாரப்படி திருமணங்கள் நடைபெறுகின்றன. சைவசமய மக்களின் வழிபாட்டிடமாக இவ்வாலயம் இயங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்துள்ளனர். யாழ்பாணத்தார் ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி கோவில் என்பதற்கேற்ப அவர்களது ஈடுபாடு இருந்தது.

17.7.1955இல் கோயிற் பரிபாலனசபை கூடி புதிய தர்மகர்த்தாக்களைத் தெரிவு செய்தது. 1959இல் பரிபாலன விதிகள் வகுக்கப்பட்டன.

இக்கோயில் நல்லமுறையில் இயங்க பிரபல சமூக சேவையாளரும் செனட்டரும் சமாதான நீதவானுமான அமரர் திரு.த நீதிராஜா அவர்கள் காட்டிய ஊக்கமும் கால் நூற்றாண்டிற்கும் மேலாக இவ்வாலயப் பொருளாளராக இருந்து பணிபுரிந்த அமரர் திரு. நா. க. மயில்வாகனம் அவர்களது தொண்டும் மறக்கமுடியாதவை.



கும்பாபிஷேகங்கள்

1859இல் ஆலயத் திருப்பணி தொடங்கப் பெற்று 8.6.1966இல் முதல் கும்பாபிஷேகமும் 29. 10. 1980இல் இரண்டாவது கும்பாபிஷேகமும் 26.0.1993இல் மூன்றாவது கும்பாபிஷேகமும் சிறப்பாக நடைபெற்றன.

ஆலய சொத்து சம்பந்தமான விபரங்கள்

அசையாச் சொத்தாக நிலமும் திருமண மண்டபமும் அசையும் சொத்துக்களாக மணவறை, பாத்திரங்கள், தளபாடங்கள் உள்ளன.

ஆலய வரலாறு

200 ஆண்டுகள் பழமை வாய்ந்தது இவ் ஆலயம். வல்வெட்டித்துறையைச் சேர்ந்த புண்ணிய சீலர் ஒருவரால் 1810ஆம் ஆண்டளவில் "வேல்" ஸ்தாபித்து வழிபட்டு வந்ததாகவும் அவருக்குப் பிறகு அவரது மகனும் ஆலயத்தை ஆதரித்ததாக செவிவழிச் செய்தியாக அறியமுடிகின்றது. இவ்வாலயத் திருப்பணி 1859இல் நிறைவேறியதாக மூலஸ்தான யந்திரித்தகடு மூலம் தெரியவருகின்றது.

யாழ்ப்பாணத்தைக் சேர்ந்த கொழும்பு வாழ் மக்கள் காலத்திற்குக் காலம் இக்கோயிலைப் புதுப்பித்தும் திருப்பணிகள் செய்தும்


பம்பலப்பிட்டி அருள்மிகு ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலயம்
பத்தாம் ஆண்டு வருஷாபிஷேகப் பெருவிழா சித்திரத்தேர் நகர்பவனி



ஆவணி 15ம் நாள் (01 09 2011) வியாழக்கிழமை
விநாயகசதுர்த்தி விரதம் இலட்சார்ச்சனை, ஹோமபூர்த்தி

ஆவணி 16ம் நாள் (02 09. 2011) வெள்ளிக்கிழமை
வருஷாபிஷேகப் பெருவிழா

ஆவணி 17ம் நாள் (03 09 2011) சனிக்கிழமை
சித்திரத்தேர் காலி வீதி, பம்பலப்பிட்டி, வெள்ளவத்தை நகர்பவனி

இல. 359, காலி வீதி, கொழும்பு 4.
தொ.பே : 2583315

ஸ்ரீ மாணிக்கவிநாயகர் பாதம் தொழ மாண்புகழ்மிகுந்து வரும்
"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

இங்ஙனம்
சம்மாங்கோட்டார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சத்தியவான் – சாவித்திரி

அசுவபதியென்னும் அரசன் தான தர்மங்கள் செய்து நல்லாட்சி புரிந்து வந்தார். ஆனால், அவருக்கு புத்திரரேயில்லையென்ற பெருங் குறையிருந்தது. அங்கு வந்த நாரதர் அசுவபதியிடம் சாவித்ரிதேவி (பார்வதி)யை மனதில் தியானித்து அக்னியால் ஹோமங்களை செய்தால் அந்த தேவியின் கிருபையால் ஜெயமுண்டாகும் என்றார். அந்தணர்க்கும், தேவர்கட்கும் அவிர்பாகம் கொடுத்து வந்தனங்கள் செய்தார் மகாராஜன், அப்பொழுது அக்னி குண்டத்தின் நடுவில் ஒரு தேவி தோன்றினாள்.

அரசனுடைய கடும் தவத்துக்கு பலனாக, கன்னிகையாக தானே அவதரிப்பதாக கூறி மறைந்தாள். பின்னர், பட்ட மகிஷியரான மாளவிதேவி திருவயிற்றில் வந்து பிறந்தவள் சாவித்திரி என்ற தெய்வகுழந்தை. அந்த குழந்தைக்கு ஜாதகம், நாமகரணம் முதலியன செய்தார்கள். சுக்ல பஷசந்திரனைப் போல் வளர்ந்தாள். தேவி மஹாலஷ்மியை போல வடிவழகாய் இருந்தாள். தேவியின் அறிவு. அழகிற்கு ஏற்ற கணவன் கிடைக்கவில்லை. ஆகவே, 'நீயே உன் தோழிமாருடன் சென்று உன் மனசுக்கு இசைந்த கணவனை தேர்ந்தெடுத்துக்கொள்' என்றார் அரசர். தேசமெல்லாம் தேடி, கடைசியில் வனத்திற்கு வந்தாள் தேவி. அங்கு ஒரு நந்தவனத்தில் ஞானிபோல நல்ல மலரெடுக்கும் நாயகரை கண்டவுடன், இவர் தான் தமக்கேற்ற இஷ்ட கணவன் என்றறிந்து. மனதில் தீர்மானம் செய்து கொண்டாள்.

தன்னுடைய நாடு இழந்து. காட்டில் வந்து கடும் தபம் செய்யும் யவசேன ராஜாவின் புத்திரர் (சத்யவான்) என்பவரை மனதில் வரித்தேன் என்று தேசம் திரும்பிய சாவித்திரி தேவி எல்லோரிடமும் கூறினாள். அங்கு இருந்த நாரதர் கலங்கி போய் 'சத்யவான் சகல குணவான், ஆனால் ஒரு தோஷம் உள்ளது. இன்று முதல் ஒருவருடம் (முன்னூற்றறுபதாம் நாள்) மத்யான காலம் மரணம் வருமென்று சொன்னார். இதைக்கேட்ட மன்னர் தேவியை நோக்கி 'வேறு வரன் பார்க்கிறேன்' என்கிறார்.

அதற்கு தேவி 'பதிவிரதையானவர்கள் ஒருவரை பார்த்து வரித்த பின் வேறு ஒருவரையும் மனத்தால் கூட நினைக்க மாட்டார்கள் என்று திடமாக கூறினாள். அதற்கு நாரதர் 'அவள் தாலி பலத்தால் தருமராஜரையும் ஜெயிப்பாள். அவள் மனது திடத்தாலே மிருத்யுவை ஜெயிப்பாள்' என்று தைரியம் கூறினார்.

அசுவபதி ராஜாவும் நாரதர் சொன்னபடி. சத்யவானுக்கு தன் அருமை மகள் சாவித்ரியை கன்னிகாதானம் செய்து கொடுத்தார். அரச குமாரியாக இருந்தாலும். காட்டில் சத்யவானுக்கும். கண் தெரியாத அவளுடைய பெற்றோர்களுக்கும் பணிவிடைகள் தவறாமல் செய்து வந்தாள். தன் கணவரின் உயிருக்காக கௌரியை பூஜித்து வந்தாள். மேலும், அந்த உத்தமி உபவாஸம் பல இருந்தாள். அமாவாசை, பௌர்ணமி, அஷ்டமி, சதுர்த்தியிலும் பார்வதியை பூஜித்து வந்தாள். தவமும் இருந்தாள். மூன்று நாள் மௌன விரதம் இருந்தாள்.

மாதம் முதல் தேதியில் விரதம் இருந்தாள். நாரதர் சொன்ன தேதியை மனதில் கொண்டு, பங்குனி மாதம் முதல் நாள் அதிகாலையில் எழுந்து தூய நீராடி. அம்பிகைக்கு பூசைகள் செய்து. பாரணைகள் செய்து, பட்டினியாக கணவனுடன் கானகம் சென்றாள். உண்மை அறியாத சத்யவான், மனைவியுடன் உரையாடிக்கொண்டு நடந்தான். ஆனால் சாவித்ரியோ, மனம் கலங்கி தேவியை துதித்துக் கொண்டு இருந்தாள். சத்தியவான் காய்கனிகளை பறித்து விட்டு மத்யானம் மரம் வெட்டும்போது, தலைவலி என்று கூறினான். உடல் முழுவதும் வியர்த்து, நித்திரை வருகிறது என்று கூறி சாவித்ரி மடியில் விழுந்தவன் கட்டைபோல் ஆனான். சாவித்ரியும் உள்ளம் பதற, உடம்பு நடுங்க, நெஞ்சம் கலங்கி, கண்கள் நீர் சொரிய. மஹாதேவியை துதித்து மரத்தடியில் வீற்றிருந்தாள். பதிவிரதையின் கண்களுக்கு. யமதர்மராஜன் தெரிந்தான். சத்யவான் உயிரை அவன் எடுத்துச் செல்லும் போது. சாவித்ரி தேவியும் பின்தொடர்ந்து தோத்திரங்கள் சொல்லிக் கொண்டே சென்றாள். தேவியின் தோத்திரங்கள் கேட்ட யமதர்மராஜன் மனம் குளிர்ந்து என்ன வரம் வேண்டும் என்றான்.

புத்திசாலியான சாவித்ரி தேவி ஐந்து வரங்கள் கேட்டு. கடைசியில் தன் கணவனின் உயிரையும் பெற்றுக்கொண்டாள். மாலையில் தன் கணவனுடன் மாமி. மாமா இருக்கும் இடம் சென்றாள். அவர்களுக்கு கண்களும் தெரிந்தன. நாடும் கிடைத்தது. இதையறிந்த தேவியின் பெற்றோர்களும் அங்கு வந்தனர். நடந்ததையறிந்த எல்லோரும் 'இவள் மானிட பெண் அல்ல, தேவியின் அவதாரம்' என புகழ்ந்தார்கள். சாவித்ரி தேவியும் தன் கணவன், மற்ற சுற்றாருடன் சுகமாக வாழ்ந்தாள் என புராணம் கூறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தனம் தரும் கல்வி தரும் ஒருநாளும் தளர்வறியா
மனம்தரும்; தெய்வ வடிவும் தரும், நெஞ்சில் வஞ்சம் இல்லா
இனம் தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனம் தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே.

-அபிராமி அந்தாதி -

# பஞ்சாங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| செப்டம்பர் | ஆவணி | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 15 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 1.35 - 3.05<br>7.35 - 9.05<br>6.05 - 7.35<br>9.05 - 10.35 | சதுர்த்தி பின்னிரவு 12.06<br>அத்தம் மு.ப. 8.40<br>சித்தம் | விநாயகசதுர்த்தி விரதம் |
| 02 | 16 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 10.35 - 12.05<br>6.05 - 7.35<br>3.05 - 4.35<br>7.35 - 9.05 | பஞ்சமி முன்னிரவு 9.43<br>சித்திரை காலை 7.01<br>சுவாதி பின்னிரவு 5.26<br>சித்தம் | |
| 03 | 17 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 9.05 - 10.35<br>3.05 - 4.35<br>1.35 - 3.05<br>6.05 - 7.35 | ஷஷ்டி முன்னிரவு 7.28<br>விசாகம் பின்னிரவு 4.00<br>சித்தம் | ஷஷ்டி விரதம் |
| 04 | 18 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 4.35 - 6.05<br>9.05 - 10.35<br>12.05 - 1.35<br>3.05 - 4.35 | ஸப்தமி மாலை 5.25<br>அனுசம் பின்னிரவு 2.50<br>மரண<br>மாலை5.25ன் மேல் அட்டமி | |
| 05 | 19 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 7.35 - 9.05<br>12.05 - 1.35<br>10.35 - 12.05<br>1.35 - 3.05 | அட்டமி பி.ப. 3.39<br>கேட்டை பின்னிரவு 1.57<br>சித்தம் | அட்டமி - நவமி |
| 06 | 20 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 3.04 - 4.34<br>10.34 - 12.04<br>9.04 - 10.34<br>12.04 - 1.34 | நவமி பி.ப. 2.11<br>மூலம்-அமிர்தம் பி.இ. 1.24<br>நவமி பி.ப. 2.11வரை<br>ஆவணி மூலம் | |
| 07 | 21 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 12.04 - 1.34<br>4.34 - 6.04<br>7.34 - 9.04<br>10.34 - 12.04 | நவமி பி.ப. 1.08<br>பூராடம் பின்னிரவு 1.18<br>அமிர்தம் | |
| 08 | 22 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 1.34 - 3.04<br>7.34 - 9.04<br>6.04 - 7.34<br>9.04 - 10.34 | ஏகாதசி பி.ப. 12.33<br>உத்தராடம் சித்தம்-<br>-பின்னிரவு 1.41 | பரிவர்த்தன ஏகாதசி விரதம் |
| 09 | 23 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 10.34 - 12.04<br>6.04 - 7.34<br>3.04 - 4.34<br>7.34 - 9.04 | துவாதசி பி.ப. 12.29<br>திருவோணம் மரண-<br>பின்னிரவு 2.33 | ஆவணி ஓணம்,<br>பிரதோஷ விரதம் |
| 10 | 24 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 9.03 - 10.33<br>3.03 - 4.33<br>1.33 - 3.03<br>6.03 - 7.33 | திரயோதசி பி.ப. 12.53<br>அவிட்டம் பின்னிரவு 3.53<br>சித்தாமிர்தம் | |
| 11 | 25 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 4.33 - 6.03<br>9.03 - 10.33<br>12.03 - 1.33<br>3.03 - 4.33 | சதுர்த்தசி பி.ப. 1.49<br>சதயம் பின்னிரவு 5.43<br>சித்தம் | நான்காம்<br>ஆவணி ஞாயிறு,<br>பிறை முழுநோன்மதி<br>தினம் |
| 12 | 26 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 7.33 - 9.03<br>12.03 - 1.33<br>10.33 - 12.03<br>1.33 - 3.03 | பூரணை பி.ப. 3.13<br>பூரட்டாதி முழுவதும்<br>மரண | பூரணை விரதம்,<br>உமா மகேஸ்வரி<br>விரதம் |
| 13 | 27 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 3.03 - 4.33<br>10.33 - 12.03<br>9.03 - 10.33<br>12.03 - 1.33 | பிரதமை பி.ப. 4.56<br>பூரட்டாதி-மரண-<br>காலை 7.55 | மஹாளயபக்ஷாரம்பம் |
| 14 | 28 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 12.03 - 1.33<br>4.33 - 6.03<br>7.33 - 9.03<br>10.33 - 12.03 | துதியை முன்னிரவு 6.52<br>உத்தரட்டாதி சித்தம்-<br>பி.ப 10.23 | கரி நாள் |
| 15 | 29 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 1.33 - 3.03<br>7.33 - 9.03<br>6.03 - 7.33<br>9.03 - 10.33 | திருதியை முன்னிரவு 8.52<br>ரேவதி பி.ப. 12.56<br>சித்தாமிர்தம் | |
| 16 | 30 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 10.33 - 12.03<br>6.03 - 7.33<br>3.03 - 4.33<br>7.33 - 9.03 | சதுர்த்தி முன்னிரவு 10.47<br>அச்சுவினி பி.ப. 3.27<br>அமிர்தசித்தம் | சங்கடஹரசதுர்த்தி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| செப்டம்பர் | ஆவணி | | | | |
|---|---|---|---|---|---|
| 17 | 31 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 9.03 - 10.33<br>3.03 - 4.33<br>1.33 - 3.03<br>6.03 - 7.33 | பஞ்சமி பின்னிரவு 12.27<br>பரணி மாலை 5.46 | |
| 18 | புரட்டாதி<br>01 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 4.33 - 6.03<br>9.03 - 10.33<br>12.03 - 1.33<br>3.03 - 4.33 | ஷஷ்டி பின்னிரவு 1.52<br>கார்த்திகை முன்னிரவு 7.47<br>சித்தம் | கார்த்திகை விரதம்,<br>கபில ஷஷ்டி |
| 19 | 02 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 7.33 - 9.03<br>12.03 - 1.33<br>10.33 - 12.03<br>1.33 - 3.03 | ஸப்தமி பின்னிரவு 2.45<br>ரோகிணி முன்னிரவு 9.23<br>அமிர்தம் பின்னிரவு-<br>-2.45ன் மேல் அட்டமி | |
| 20 | 03 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 3.03 - 4.33<br>10.33 - 12.03<br>9.03 - 10.33<br>12.02 - 1.32 | அட்டமி பின்னிரவு 3.36<br>மிருகசீரிடம் சித்தம்-<br>-முன்னிரவு 10.29<br>மத்தியாஷ்டமி | அட்டமி - நவமி |
| 21 | 04 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 12.02 - 1.32<br>4.32 - 6.02<br>7.32 - 9.02<br>10.32 - 12.02 | நவமி பின்னிரவு 2.57<br>திருவாதிரை மு.இ 11.05<br>சித்தம்<br>நவமி பின்னிரவு 2.57வரை | |
| 22 | 05 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 1.32 - 3.02<br>7.32 - 9.02<br>6.02 - 7.32<br>9.02 - 10.32 | தசமி பின்னிரவு 2.19<br>புநர்பூசம் மு.இ. 11.13<br>அமிர்தம் | |
| 23 | 06 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 10.32 - 12.02<br>6.02 - 7.32<br>3.02 - 4.32<br>7.32 - 9.02 | ஏகாதசி பின்னிரவு 1.12<br>பூசம் முன்னிரவு 10.53<br>மரண | ஏகாதசி விரதம் |
| 24 | 07 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 9.02 - 10.32<br>3.02 - 4.32<br>1.32 - 3.02<br>6.02 - 7.32 | துவாதசி முன்னிரவு 11.42<br>ஆயிலியம் மரண-<br>முன்னிரவு 10.09 | சந்நியஸ்தமஹாளயம்<br>முதலாம்<br>புரட்டாதி சனி |
| 25 | 08 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 4.32 - 6.02<br>9.02 - 10.32<br>12.02 - 1.32<br>3.02 - 4.32 | திரயோதசி மு.இ. 9.54<br>மகம் - மரண-<br>முன்னிரவு 9.00 | பிரதோஷ விரதம் |
| 26 | 09 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 7.32 - 9.02<br>12.02 - 1.32<br>10.32 - 12.02<br>1.32 - 3.02 | சதுர்த்தசி மு.இ. 7.51<br>பூரம் முன்னிரவு 7.47<br>சித்தம் | கேதாரேஸ்வர விரதம்,<br>சஸ்திரஹதமஹாளயம் |
| 27 | 10 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 3.02 - 4.32<br>10.32 - 12.02<br>9.02 - 10.32<br>12.02 - 1.32 | அமாவாசை மாலை 5.35<br>உத்தரம் மாலை 6.16<br>அமிர்த சித்தம் | அமாவாசை விரதம்,<br>மஹாளயபக்ஷ<br>முடிபு |
| 28 | 11 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 12.02 - 1.32<br>4.32 - 6.02<br>7.32 - 9.02<br>10.32 - 12.02 | பிரதமை பிற்பகல் 3.12<br>அத்தம் பிற்பகல் 4.39<br>சித்தம் | நவராத்திரி<br>விரதாரம்பம் |
| 29 | 12 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 1.32 - 3.02<br>7.32 - 9.02<br>6.02 - 7.32<br>9.02 - 10.32 | துதியை பிற்பகல் 12.48<br>சித்திரை பிற்பகல் 3.00<br>சித்தாமிர்தம் | |
| 30 | 13 | ராகு<br>சுப<br>எம<br>குளி | 10.32 - 12.02<br>6.02 - 7.32<br>3.02 - 4.32<br>7.32 - 9.02 | திருதியை மு.ப. 10.27<br>சுவாதி பிற்பகல் 1.25<br>சித்தம் | சதுர்த்தி விரதம் |




PORTRAIT
IN PASTEL / PENCIL

A portrait is a Perfect Gift

Call : 0777 614 186 | E-mail : flexvijay@sltnet.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆகஸ்ட் மாத Flex அருளில் கேட்கப்பட்ட கேள்விக்கு சரியான விடையைக்கூறி குலுக்கல் முறையில் தெரிவான தெஹிவளை இல. 41/2, இனிஷியம் வீதியைச் சேர்ந்த திருமதி: R. சுப்பிரமணியம் அவர்களுக்கு JEYECHANDRANS வழங்கிய பட்டுப்புடவை ஒன்று Flex Publications இயக்குனர் திரு. P. விஜய் அவர்களால் வழங்கப்பட்டது




ஆகஸ்ட் மாத Flex அருளில் கேட்கப்பட்ட கேள்விக்கு சரியான விடையைக்கூறி குலுக்கல் முறையில் தெரிவான வெள்ளவத்தை இல. 104 1/6, CDI தொடர் மாடியைச்சேர்ந்த செல்வி G.A. கந்தையா அவர்களுக்கு பக்திப்பாடல்கள் அடங்கிய AUDIO CD ஒன்று Flex Publications இயக்குனர் திரு. P. விஜய் அவர்களால் வழங்கப்பட்டது



பிரபல தென் இந்தியப் பாடகி
கலைமாமணி
**எல். ஆர். ஈஸ்வரி**
**அவர்களின் ஓவியம்**

ஆடிவேல் விழாவை முன்னிட்டு பம்பலப்பிட்டி மாணிக்கவிநாயகர் ஆலயத்தில் ஆகஸ்ட் மாதம் 13ம் திகதி சனிக்கிழமை இரவு நடைபெற்ற இசை கச்சேரியில் தென் இந்தியாவின் பிரபல பின்னணிப்பாடகி கலைமாமணி எல். ஆர். ஈஸ்வரி கலந்து கொண்டு பக்திப்பாடல்களைப் பாடி சிறப்பித்தார். அவ்விழாவில் எல். ஆர். ஈஸ்வரி அவர்களுக்கு Flex Publications சார்பில் Flex அருள் ஆசிரியர் திரு. K. யோகேந்திரன் அவர்களால் வரையப்பட்டு வழங்கப்பட்ட ஓவியம்.




'ஆலயம் தொழு' என்று சும்மா சொல்லிவிடவில்லை நம் முன்னோர்கள். அவர்கள் அனுபவபூர்வமாக உணர்ந்து சொல்லியிருக்கும் மந்திரம் அது. நமது கலாசார பண்பாட்டின் அடையாளங்களாக ஆலயங்கள் திகழ்கின்றன. ஆலயங்கள் தான் மனிதனைக் கோபங்களிலிருந்தும், குற்றங்களிலிருந்தும், கொடூரங்களிலிருந்து வெகுவாகக் குறைத்து வருகின்றன. அந்த ஆலயங்களில் சில காலத்தின் மாற்றத்தினாலும் வசதி வித்தியாசத்தாலும் பக்தர்கள் வருகை குறைந்தும் வருமானம் குறைந்தும் பராமரிப்பில்லாமாலும் பாழடைந்து கிடக்கிறது.

அத்தகைய ஆலயங்களில் ஒன்று கொழும்பு 7 இல. 63, டொரிங்டன் அவென்யூவில் அமைந்துள்ள டொரிங்டன் ஸ்ரீ முருகன் ஆலயம். டொரிங்டன் ஸ்ரீ முருகன் ஆலயம் காலஞ் சென்ற அப்பாவு S. சுப்பையா என்பவரால் 1963 ஆண்டு அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. இவ்வாலயம் புனரமைப்புச் செய்யபட்டபோது மாண்புமிகு காலஞ் சென்ற முன்னால் ஜனாதிபதி J.R. ஜெயவர்த்தன மற்றும் பேட்ரம் ரொட்றிகோ என்பவர்களால் ஆலயம் சம்பிரதாய முறைப்படி திறந்துவைக்கப்பட்டது.

அக்காலத்தில் மிகப்பிரபல்யமாகவும் சக்திவாய்ந்ததாகவும் திகழ்ந்த இவ் ஆலயம் இன்று நிர்வாகத்தின் சீர்கேட்டினால் மிகவும் கலையிழந்த நிலையில் காணப்படுகின்றது.ஒரு காலத்தில் மிகப்பிரபல்யமாகத் திகழ்ந்த இவ் ஆலயத்தின் நிலைமையை கண்டும் காணமல் இருப்பது மிகவும் வருந்தத்தக்கது.

கோயிலுக்கு வரும் அடியார்கள் மட்டுமன்றி கொழும்பில் நல்ல வருமானம் தரும் ஆலய தர்மகர்த்தாக்கள் கூட இதில் ஒன்று சேர்ந்து ஆலயத்தின் புனரமைப்புக்கு ஒத்துழைப்பார்கள் என நம்புகிறோம்.

ஒருமுறை இவ் ஆலயம் சென்றால் நிலைமைபுரியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# செப்டம்பர் மாதத்திற்கான ராசி பலன்




பெரும்பாலான கிரகங்கள் அனுகூலமாகவே சஞ்சரிக்கின்றன. அதிலும் 17ஆம் திகதிக்கு மேல் சூரியன் 6ல் பிரவேசிப்பது அமோக பலன்களுக்கு வரவேற்புத் தோரணம் கட்டும் அமைப்பாகும். எதிரிகளை வெல்வீர்கள், ஏற்றம் பல பெறுவீர்கள். உதிரிகளாய்க் கிடந்த பொருளும் உபயோகம் ஆகிடுமே! மதியூகத்தாலே மகத்துவங்கள் அடைந்திடுவீர். தெம்பு வரும். வம்பு விலகும். அம்பைப்போல் வேகங் கொண்டு செயல்பட்டு அடித்திடுவீர், ஒரே கல்லில் ஒரு கொத்து மாங்காய்களை! 55% முதல் 60% வரை அட்டகாசமான மாதமிது.

சாதகமான தேதிகள்: 2, 3, 6, 7, 11, 17, 22, 26, 30.




சுக்கிரனும் புதனும் 4, 5ஆம் வீடுகளில் அற்புதமாய் உலவுவதால் இல்லத்தில் சுபநிகழ்ச்சி இஷ்டம்போல் நடந்தேறும். வெல்லத்து இனிப்பைப்போல் மிக இனிக்கும் தாம்பத்யம்! உள்ளத்தில் உள்ள ஆசையெல்லாம் உடனுக்குடன் நிறைவேறும். அள்ளத்தான் குறையாமல் அதிகமாய் லாபம் வரும். ஆனாலும் தள்ளத்தான் முடியாத சங்கடங்கள் சில உண்டு. கள்ளத்தனம் செய்வோரால் கஷ்டங்கள் சில உண்டு. 65% வரை அடையலாம் நன்மைகளை!.

சாதகமான திகதிகள் : 2, 3, 7, 10, 15, 20, 27, 29.




செப்டம்பர் மாதத்தைச் சிறப்பாக்குகின்றனர் சூரியன், புதன், சுக்கிரன் ஆகிய மூவரும்! எதிர்பாரா வரவுண்டாகும். அதிகாரப் பதவி அதிர்ஷ்டமுள்ள சிலருக்கு கிட்டும். மதிவன்மையாலே மகத்துவங்கள் பெற்றிடுவீர். மிக்க துணிவுடனே மேலான பணி செய்து தக்க பலனடைவீர்கள். மக்கள் போற்றிடுவர். சொக்க வைக்கும் சுகங்கள் பல தொடர்ச்சியாய் அனுபவிப்பீர். 65% வரை நற்பலன்களை

சாதகமான திகதிகள் : 1, 2, 4, 7, 15, 19, 26, 29, 30.




சூரியன் 14ஆம் திகதிக்கு மேல் 3ஆம் இடத்திற்குப் பிரவேசிப்பதும், புதன் - சுக்கிரன் ஆகியோரது சஞ்சாரமும் சாதகமாக இருப்பதும் செப்டம்பர் மாதத்தைச் சிறப்புறச் செய்கின்றன. முடியாத காரியத்தை முடித்துச் சாதிப்பீர்கள். படியாத பேரத்தைப் படியவைத்து லாபம் காண்பீர். ஓடியாத உள்ளங் கொண்டு ஓயாமல் பாடுபட்டு உயர்ந்திடுவீர் வாழ்வினிலே! உங்களுக்கு நல்ல பாதை காட்டுகிற விடிவெள்ளி தோன்றும் காலம் இது. 75% வரை எதிர்பார்க்கலாம் நற்பலன்களை!.

சாதகமான திகதிகள் : 2, 5,7, 11, 14, 15, 18, 29, 30.




செப்படம்பர் மாதம் சிகரம் தொடும் மாதம் அல்ல என்றாலும் பள்ளத்தில் வீழ்த்தும் மாதமும் அல்ல. உள்ளது உள்ளபடி இயல்பாகச் செல்லுமென்பேன். அமைதியாகக் கழிந்து விடும். ஆபத்து ஏதுமில்லை. ஆன்மிகத் தெளிவைப் புதிதாய் அடைந்திடுவீர். தீர்த்த யாத்திரை சென்று நலம் பெறுவீர். 50% நல்ல மாதம்.

சாதகமான திகதிகள் :1, 4, 5, 9, 18, 20, 26, 30.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செப்டம்பர் மாதத்திற்கான ராசி பலன்




புதனும் சுக்கிரனும் நல்லவிதத்தில் சஞ்சரிப்பதால் இதமான சம்பவம் எத்தனையோ நடைபெறும். பதமான வார்த்தை சொல்லிப் பலவிதமாய் நன்மை பெறுவீர்கள். சுகமாகப் பொழுதுபோக்கிச் சுகித்திருப்பீர்கள். பெண்ணொருத்தி பிரியத்தால் பெருமகிழ்ச்சி அடைவீர்கள். மண்விளைச்சல் மகத்தான லாபம் தரும். 60% நன்மை உண்டு.

சாதகமான திகதிகள் : 3, 5, 7, 10, 12, 19, 20, 25, 30.




சிறப்பான பலன் நடக்கும் செப்டம்பர் மாதத்தில்! பொறுப்புகள் கூடிவிடும். பொலிவு மிகுந்துவிடும். வெறுப்புகள் மறைந்துவிடும். விரோதம் நட்பாகும். விசேஷங்கள் வீட்டிலுண்டு ! விநோதங்கள் வாழ்விலுண்டு. வினாக்கள் விடையாகும். கனாக்கள் நனவாகும். விழாக்களில் கலந்துகொண்டு வெகுமதிகள் பெற்றிடுவீர். 70% மேன்மையுண்டு.

சாதகமான திகதிகள் : 1, 4, 8, 17, 16, 22, 28, 29.




உச்சத்தைத் தொட்டிடலாம். ஊர்போற்ற உயர்ந்திடலாம். அச்சத்தை அகற்றிவிட்டு ஆனந்தம் கண்டிடலாம். தவமிருந்ததற்குத் தக்க பலன் கிட்டிவிடும். சிவனின் அருளுண்டு. தீமையெல்லாம் வென்றிடுவீர். அவமரியாதை செய்தோர் "ஆகா" எனப் புகழ்வர். உள்ளத்தில் உவகை வெள்ளம் உடைப்பெடுத்துப் பாயுமென்பேன். இல்லத்தில் சுப நிகழ்ச்சி இனிமையாய் நடக்குமென்பேன். 75% ஏற்றமிகு மாதமிது.

சாதகமான திகதிகள் : 1, 7, 10, 15, 24, 25, 30.




சூரியனார் 10ல் பிரவேசிப்பதால் சாதனைகள் செய்திடலாம். சகாப்தம் படைத்திடலாம். சரித்திரத்தைப் புதிதாக மாற்றி எழுதிடலாம். வேதனைகள் தீர்ந்துவிடும். விடியலைக் கண்டிடலாம். புதுப்பாதை கண்டு பூரிப்பாய் நடந்திடலாம். புன்னகைத் தேசத்தின் மன்னனாய் அமர்ந்திடலாம். ஏறத்தாழ 75% நன்மையுண்டு.

சாதகமான திகதிகள் : 2, 5, 10, 16, 19, 21, 30.




செப்டம்பர் மாதம் சிறந்த மாதம்தான் என்று சுக்கிரனாரும் புதனாரும் சொல்கிறார்கள். லாப வரவு மிகுதிப்படும். பாப வினை தீர்ப்பீர்! பல தலங்கள் தரிசிப்பீர். கோபமாய்ச் சென்றோரும் கொஞ்சிக் குலாவிட வந்திடுவர். தாபம் தணிந்துவிடும். தாரத்தால் யோகமுண்டு. தீரமாய்ச் செயல்பட்டு ஜெயங்கள் பெறுவீர்கள். 55% முதல் 60% வரை நன்மையுண்டு.

சாதகமான திகதிகள் : 1, 5, 12, 15, 24, 27, 30.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செப்டம்பர் மாதத்திற்கான ராசி பலன்




செப்டம்பர் மாதத்தைச் சிறப்பான மாதம் ஆக்குதிறார் 6ல் சஞ்சரிக்கின்ற செவ்வாய்! எண்ணிய எண்ணங்கள் திண்ணமாய் நிறைவேறும். பண்ணிய புண்ணியத்தின் பலன்களைக் காண்பீர்கள். அலங்காரப் பொருள்களை, ஆடை ஆபரணங்களைக் கலங்காமல் வாங்கிக் களிப்பு அடைவீர்கள். சூரியனின் சஞ்சாரம் சரியில்லை என்பதால் உஷ்ண சம்பந்தாமன உடல் கோளாறுகள் ஏற்படலாம். உறவுகளுக்குள் உரசல் வந்து மறைந்திடலாம். 55% அருமையான மாதமிது.

சாதகமான திகதிகள் : 2, 4, 8, 24, 27, 30.




இந்த மாதம் சூரியன் 6ல் சஞ்சரிப்பதால் நன்மைகள் பல நடைபெறும். எவரெஸ்டைத் தொட்டிடலாம். இமயத்தை வென்றிடலாம். எவருக்கும் இணையின்றி எழுந்து நின்றிடலாம். வாழ்க்கைத் தரம் உயரும். வசதியெல்லாம் பெற்றிடுவீர். 65% அருமையான மாதமிது.

சாதகமான திகதிகள் : 2, 4, 7, 10, 12, 18, 20, 24, 29.

# செப்டம்பர் மாதத்திற்கான விரதங்கள்




01ம் திகதி வியாழன் - விநாயகசதுர்த்தி விரதம்
03ம் திகதி சனி - ஷஷ்டி விரதம்
08ம் திகதி வியாழன் - பரிவரித்தன ஏகாதசி விரதம்
09ம் திகதி வெள்ளி - பிரதோஷ விரதம்
11ம் திகதி ஞாயிறு - நான்காம் ஆவணி ஞாயிறு (பினர முழு நோன்மதி தினம்)
12ம் திகதி திங்கள் - பூரணை விரதம், உமா மகேஸ்வர விரதம்
13ம் திகதி செவ்வாய் - மஹாளயபக்ஷாரம்பம்
16ம் திகதி வெள்ளி - சங்கடஹர சதுர்த்தி விரதம்
18ம் திகதி ஞாயிறு - கார்த்திகை விரதம், கபில ஷஷ்டி விரதம்
23ம் திகதி வெள்ளி - ஏகாதசி விரதம்
24ம் திகதி சனி - முதலாம் புரட்டாசி சனி
25ம் திகதி ஞாயிறு - பிரதோஷ விரதம்
26ம் திகதி திங்கள் - கேதாரேஸ்வர விரதம்
27ம் திகதி செவ்வாய் - அமாவாசை விரதம், மஹாளயபக்ஷ முடிவு
28ம் திகதி புதன் - நவராத்திரி விரதாரம்பம்
30ம் திகதி வெள்ளி - சதுர்த்தி விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டாரவளை
# ஸ்ரீ பத்திரகாளியம்மன்
# ஆலயம்

## 18A, சேனாநாயக்க மாவத்தை.



பண்டாரவளை ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலயம் என்றால் இன்று இலங்கை மாத்திரமல்லாது வெளி நாடுகளிலும் இன,மத பாகுப்பாடின்றி அனைத்து மக்களாலும் இவ்வாலயம் மிகவும் சக்திவாய்ந்தது என பேசப்படுகிறது. என்றால் அதற்கு காரணம், மூலகர்த்தாவாகவும், இதன் ஆதின கர்தாவுமாகிய பிரம்ம ஸ்ரீ சர்மா சுவாமிகள் தான்.

இவர் சிறு பராயம் தொட்டு தனது இஷ்ட தெய்வமான காளியம்பாளுக்கு ஒரு தனி சிறப்புமிக்க பிரமாண்ட ஒரு உருவம் அமைக்க வேண்டுமென ஆசைப்பட்டார்.

இருந்தும் 2001ம் ஆண்டு ஆசியுடன் தனது இருப்பிடத்திலேயே ஆலயத்தை அமைக்க அடிக்கல் நாட்டப்பட்டது. இந்தியாவிலேயே சிற்ப கலையில் சிறப்பு பெற்ற சிற்பிகளின் கை வண்ணத்தில் உருவாக்கப்பட்ட 33 அடி உயரத்தில் அனைவரும் மெய்சிலிக்கும் வண்ணம் காளியம்பாளும் 48 அடி உயரத்தில் அழகிய தியான சிவனும், 11 அடி உயரத்தில் மகா லஷ்சுமியும், 10 அடி உயரத்தில் சரஸ்வதி தேவியும் ராஜகோபுரத்தை போன்று பிரமாண்டமாக உயர்ந்திருக்கும் மணிகோபுரம் இரு மணிகளை கொண்ட அர்த்தநாரீஸ்வரரை போன்ற உருவில் அமைக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்ல இந்தியாவிலே மிகவும் பிரசித்தப்பெற்ற குறிஞ்சி கருவாங்காடு காளிதாச முனிவரினால் பூஜிக்கப்பட்ட மாசானியம்மன் (மிளாகாய் தேவி) முதல் தடவையாக இலங்கையில் பண்டாரவளை மண்ணில் பத்திரகாளியம்மன் ஆலயத்தில் முதலாக பிரதிஷ்டை செய்யப்படவுள்ளது. அத்தோடு சபரி மலை சாஸ்தாகுருஜியினால் வழங்கப்பட்ட பால ஆஞ்சிநேயர், பால விநாயகர், மங்கள முருகன் சமேதரராயும், காசியிலிருந்து தருவிக்கப்பட்ட ராஜ ராஜேஸ்வரியும், கேரளா பாலக்காடு ராதா சுவாமிகள் வழங்கப்பட்ட மகாலிங்கமும், நந்தி தேவரும், நவக்கிரகங்களும் அமையப் பெற்ற இவ்வாலையத்தின் மூல மூர்த்தியாக புலியுடன் கூடிய அம்பாள் அருள் பாலிக்க இவ்வாலையம் மூலஸ்த்தானத்தில் 5 அடி உயரத்தில் அமையப் பெற்றுள்ளது.

இத்தனை பரிவார மூர்த்திகளையும் தன்கத்தே அமையப் பெற்ற இவ்வாலயம் ஆரம்பத்தில் ஒரு சிறிய குடிசையாகவே இருந்தது. நாளடைவில் அம்பாளின் அருளாலும் சர்மா சுவாமிகளின் விடா முயற்சியாலும் இங்கு வரும் பக்தர்களின் உதவியுடன் மக்கள் மாத்திரம்மல்லாது உலகாலாவிய அளவில் அனைத்து மக்களின் மனதிலும் இடம் பிடித்துள்ளது என்றால் அது இவ்வாலயத்தின் அருளாசியாகும்.

2001ம் ஆரம்பிப்பப்பட்ட இவ்வாலயத்தின் கும்பாபிஷேகம் வெகுசிறப்பாக எதிர்வரும் ஆண்டு 2012 தைபூசத்தன்று வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது. இருந்தும் நிதிபற்றாக்குறையாக உள்ளமையால் பக்தர்களே, தனவந்தர்களே, அம்பிகைஅடியார்களே, கொடைவள்ளல்களே தங்களால் இயன்ற நிதியுதவிகளை வாரி வழங்கி பண்டாரவளை அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளியம்மன் அருளாசியை பெற்றுய்யுமாறு பணிவன்புடன் ஆசிர்வதித்து கேட்டுக்கொள்கின்றேன்.

சுபம்.

**தங்களின் நன்கொடைகளை அனுப்பவேண்டிய முகவரி.**

**SRI MAHA BADRAKALI AMMAN TEMPLE**

**Dr. Sri. K.A.S.Sharmaa Swaami**

Deshabandu, Deshakeerthi, Deshamanya, Lankaputhra, all island (JP)

***Reg. No: HA-6-BDL-111***

T.P. / Fax: **009457- 2232441. /0572224591 / 0572224592**

18/A, Senanayaka Mawatha,Bandarawela.

Email.sribathrakaliammantemple@yahoo.com

**K.A.S. SHARAMA SWAAMI, A/C No : 1800006036**
**COMMERCIAL BANK,BANDARAWELA,SRI LANKA.**

OM SHAKTHI



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்தி கதைகள்

## இருக்கும் இடம்!

பேராசை மிக்க ஒருவன் இறக்கும் தருவாயில் இறைவனை வேண்டினான். அவனுக்கு கடவுள் காட்சி தந்து, "உன் கடைசி ஆசை என்ன?" என்றான்.

"நான் இறந்த பிறகு போகுமிடத்தில் எனக்கு எப்போதும் மது, மாமிசம், சிகரெட் போன்ற எல்லா போகங்களும் கிடைக்க வேண்டும். அதுதான் எனது ஆசை!" என்றான்.

"அப்படியே ஆகட்டும்!" எனக்கூறி கடவுள் மறைந்தார். அதேபோல் இறந்த பிறகு அவன் விரும்பியதெல்லாம் கிடைத்தன.

சிறிது நாள் அதையெல்லாம் தொடர்ந்து சாப்பிட்டு கொண்டிருந்தான். அதைத்தவிர வேறு வேலையில்லாததால் அவனுக்கும் மிகவும் போரடித்தது.

அருகிலிருந்த ஒருவரிடம், எரிச்சலுடன், "என்ன இடம் ஐய்யா இது? இங்கே வந்ததை விட நரகத்துக்கே போயிருக்கலாம். போலிருக்கிறதே?" என்றான்.

அதற்கு அவர் மெதுவாக, "தம்பி! இப்போது நீ இருக்குமிடம் நரகம்தான்" என்றார்.



## வாழும் முறை!

குருவிடம் சீடன் ஒருவன், "உங்கள் வயதென்ன?" என்று கேட்டான். "முன்னூறு ஆண்டுகள்" என குரு பதிலளித்தார். "மன்னித்துக் கொள்ளுங்கள் குருஜி. என்னால் இதை நம்ப முடியவில்லை. தங்களின் வயது ஐம்பதுக்கு அதிகமாய் இருக்க முடியாது!" என்றான் சீடன். "நீ சொல்வது சரி தான். என் உண்மை வயது ஐம்பதுதான். ஆனால் உன்னை விட ஆறு மடங்கு அதிகமாய் வாழ்ந்துள்ளேன். 300 ஆண்டுகள் எப்படி வாழ முடியுமோ அவ்விதம் இந்த ஐம்பது ஆண்டுகளை பயன்படுத்தி வாழ்ந்திருக்கிறேன்!" என குரு கூற, சீடன் தலை கவிழ்ந்தான்.

## எப்போது பலன் கிட்டும்?

ஒரு குருவிடம் இளைஞன், "குருவே நான் உங்களிடம் சீடனாக இருந்து ஞானம் பெற விரும்புகிறேன். இதற்கு எத்தனை ஆண்டுகள் ஆகும்?" என்றான்.

"பத்து ஆண்டுகள் ஆகும்!" என்றார் குரு. "குருவே! நான் கஷ்டப்பட்டு கடுமையாக உழைத்தால்?" என்றான் இளைஞன். "உன்னால் ஞானம் பெறவே முடியாது!" என்றார். "ஏன்?" என்றான் இளைஞன்.

"எந்த வேலையையும் கஷ்டப்பட்டு செய்தால் பலன் கிடைக்காது. இஷ்டபட்டு செய்தால்தான் பலன் கிட்டும்!" என்று பதிலளித்தார் குரு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செல்வம் எது?

ஒருவன், ஒரு துறவியிடம் சொன்னான்: 'ஐயா, நான் மிகவும் ஏழை. கடவுள் என் மீது கருணையே காட்டவில்லை. என்னிடம் எதுவும் தரவில்லை. எனக்கு செல்வம் கிடைக்கும்படியாக தாங்கள் அருளவேண்டும்'.

துறவி, 'உன்னிடம் உள்ளவற்றை விற்று பணமாக்கு. உனக்கு நிறைய செல்வம் கிடைக்கும்.'

'என்னிடம் ஒன்றுமே இல்லை, விற்று காசாக்கக்கூட எதுவும் இல்லை?'

'உன்னுடைய ஒரு கண்ணை விற்று விடு. அதற்கு உனக்கு 10 ஆயிரம் ரூபாய் கிடைக்க செய்கிறேன்' என்றார் துறவி. அவன் தயாராக இல்லை. அடுத்து அவன் கை, கால், மூக்கு, இதயம் என்று ஒவ்வொரு உறுப்பாகக் குறிப்பிட்டு அதை விற்கும்படி கூறிக்கொண்டே வந்தார். ஒவ்வொரு உறுப்பிற்கும் 10 ஆயிரம் ரூபாய் தருவதாக கூறினார். அவனோ எந்த உறுப்பையும் இழக்க தயாராயில்லை. அப்போது துறவி கூறினார், 'நானே உன்னிடம் ஒவ்வொன்றும் 10 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள பொருள்களை விலைக்கு கேட்டேன். பல லட்ச ரூபாய் மதிப்புள்ள பொருள் உன் கைவசம் இருக்கிறது. அப்படியிருக்க நீ ஏன் உன்னை ஏழை என்று சொல்லிக்கொள்ள வேண்டும்? அளவில்லா செல்வச்சுரங்கமான இந்த உடலை கடவுள் உனக்கு கொடுத்திருக்கிறாரே... அதை பணியில் ஈடுபடுத்து, உழைத்து சம்பாதி. திருப்தியோடு இரு. உடல் என்கிற இந்த நவரத்தினக் களஞ்சியத்தை சரியானபடி கையாளுகிறவன் ஒருபோதும் தரித்திரன் ஆவதில்லை.'


சித்தா வைத்தியம் MEDICINE



பாரிசவாதம்,
கிரந்தியவியல்,சளி,
தொய்வு,
பாலியல் குறைபாடு,
அதிஇரத்தமுக்கம்,
உடல்மெலிவு,
பருமன், நித்திரையின்மை,
மனநோய், இளநரை,
பொடுகுக்கு சந்தியுங்கள்
பேரறிஞர் Dr. K. பாலசுப்பிரமணியம்,
சிறப்பு ஆலோசகர்
வெள்ளவத்தை.
Hot line: 0777 047 371

D&R Happy Talking



DR
Hot Line : 077-7350642
Tel: 0777-683828 / Tel: 2362828
(Black berry & Nokia Original battery and charger original accessories)
E-mail: dandrcelluler@yahoo.com
296D4 Galle Road, Wellawatte. Next to NTB Bank


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பால் குடம்
## எடுத்தால் பலன் கிடைக்கும்



மனிதர்கள் அனைவருமே நம்பிக்கையின் அடிப்படையில்தான் வாழ்க்கையை நடத்துகின்றனர். அந்த நம்பிக்கையில் தன்னம்பிக்கையும், தெய்வ நம்பிக்கையும் அடங்கும். மனிதர்கள் ஒவ்வொருவரும் தாம் நினைக்கும் காரியங்கள் அனைத்தும் வெற்றியில் முடிவடைய வேண்டுமென்று ஆண்டவனை வேண்டி, பல்வேறு விதமான நேர்த்தி கடனும் செலுத்துகிறார்கள்.

அம்மன் மற்றும் முருகன் கோவில்களுக்கு பால்குடம் எடுத்து சென்று வழிபாடு நடத்துகின்றனர், பக்தர்கள். இறைவனுக்கு அபிஷேகம் நடத்துவதற்காக கொண்டு வரப்படும் பால்குடங்களை சுத்தம் செய்வதுபோல, மனதையும் சுத்தப்படுத்திக் கொண்டு பக்தியுடன் அதனை தலைமீது வைத்துக்கொண்டு தம்மை மறந்த நிலையில் ஆலயத்தை நோக்கி செல்கின்றனர்.

மனதை ஒரு நிலைபடுத்தி, பக்தியுடன் இறைவனை சிந்தித்தால் நாம் நினைத்த காரியங்கள் நடக்கும் என்பதால் பால்குடம் எடுத்து போகின்ற நேரத்தில் மனமுருகி ஆண்டவனை ஒரு நிமிடம் நினைத்தாலே பலன் கிடைக்கும்.


வெளிநாடுகளுக்கு
விரைவாக பொதிகள்
அனுப்பும் சேவைக்கு...
இன்றே நாடுங்கள்!



**GTV Enterprises (Pvt) Ltd.**
18/3, Dr. E.A.Cooray Mawatha, Colombo 06.
Tel: **011 4654444 / 011 2360926**



**GAYATHIRRY PRODUCT**



**Home Made Foods**
MIxer, Murukku,
Ladu, Chipe & Etc.
We take order for
Wedding &
Other Occation

**Tel: 0779 651 239**

No. 25/1, Sagara Road, Bambalapotiya, Colombo 04.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானம் பெற வழி!



சீடன் ஒருவன் தன் குருவிடம், "ஞானம் பெற என்ன வழி" என்று கேட்டான். "நாவை அடக்கு!" என்றார். சீடன் புரியாமல் விழித்தான்.

குருவே விளக்கினார், "ஒருவன் நாவின் ருசி, நாக்கின் பேச்சு இரண்டையும் கட்டுப்படுத்துவதைப் பொறுத்துத்தான் வாழ்க்கை இருக்கிறது. இதை சரியாக செய்தால் ஞானம் தானாக வந்து சேரும்!" என்றார்.

# உலக வாழ்வு!

ஞானி ஒருவரிடம், "ஐயா, மனிதனுக்கும் இவ்வுலக வாழ்விற்கும் உள்ள தொடர்பு எத்தகையது?" என்று கேட்டார் ஒரு பக்தர். அவரை எழில் மிகுந்த மாளிகைக்கு அழைத்துச் சென்றார் ஞானி. அம்மாளிகையின் மலர் மஞ்சம் ஒன்றில் ஒரு பெண் சுகமாக உறங்கிக் கொண்டிருந்தாள்.

அவர்களின் காலடி ஓசையைக் கேட்டு திடுக்கிட்டு எழுந்தவளிடம் ஞானி, "பெண்ணே இந்த அழகு மாளிகை உனக்கு சொந்தமானதா?" என்று கேட்க, அதற்கு அவள், "இல்லை" "இந்த அற்புத மாளிகை வேறொருவருக்குச் சொந்தமானது. இன்று மட்டும் பாதுகாக்கும் பொறுப்பை அவர் எனக்கு வழங்கி உள்ளார்" என்று கூற, ஞானி பக்தரை நோக்கி, "எழில் மிகு இம் மாளிகைக்கும், காவல்காக்கும் இப்பெண்ணிற்கும் உள்ள தொடர்பு போன்றதே நம் உலகவாழ்வு!" என்று விளக்கினார்.



# ஆணவம் அழித்தவர்

கண்ணன், பாண்டவர் தூதனாக அஸ்தினாபுரம் சென்றார் அப்போது அந்நகர வீதியிலுள்ள மாளிகையெல்லாம் பார்த்தபடி "இது யாருடையது?" என்று ஒவ்வொன்றாகக் கேட்டபடி வந்தார்.

அந்த மாளிகைகளுக்குரியவர்கள் "இது என்னுடையது" என்று மார்தட்டிப் பெருமையுடனும் கர்வத்துடனும் கூறினார்கள்.

விதுரரின் வீட்டு வாயிலில் நின்ற கிருஷ்ணன் அதே கேள்வியை கேட்டபோது கிருஷ்ணா இது உன் வீடுதான்என்று அன்பும் பக்தியும் மேலிடக் கூறினார் விதுரர்.

ஆணவம் அற்ற விதுரரின் மனதைப் பாராட்டிய கிருஷ்ணன் மனம் மகிழ்ந்து அவ்வீட்டுக்குள் சென்றார். ஆணவம் இல்லாத வீட்டுக்குள்தான் ஆண்டவன் புகுவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் இயற்றிய சகலகலாவல்லி மாலை

வெண்தா மரைக்கு அன்றி நின்பதம் தாங்க என வெள்ளைஉள்ளத்
தண்தா மரைக்குத் தகாதுகொ லோசகம் ஏழும்அளித்து
உண்டான் உறங்க ஒழித்தான்பித் தாகஉண் டாக்கும்வணணம்
கண்டான சுவைகொள் கரும்பே சகல கலாவல்லியே!

நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியில் பணித்தருள் வாய்பங்க யாசனத்தில்
கூடும் பசும்பொற் கொடியே கனதனக் குன்றும் ஐம்பால்
காடும் சுமக்கும் கரும்பே சகல கலாவல்லியே.

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்அமுது ஆர்ந்துஉன் அருள்கடலில்
குளிக்கும் படிக்குஎன்று கூடும்கொ லோஉளம் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவல் புல்வோர் கவிமழை சிந்தக்கண்டு
களிக்கும் கலாப மயிலே சகல கலாவல்லியே.

தூக்கும் பனுவல் துறைதோய்ந்த கல்வியும் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்துஅருள் வாய்வட நூல்கடலும்
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும் தொண்டர்செந் நாவில்நின்று
காக்கும் கருணைக் கடலே சகல கலாவல்லியே.

பஞ்சுஅப்பு இதம்தரு செய்யபொற் பாத பங்கேருகம்என்
நெஞ்சத்தடத்து அலராதது என்னே நெடும்தாள் கமலத்து
அஞ்சத் துவசம் உயர்த்தோன் செந்நாவும் அகமும் வெள்ளைக்
கஞ்சத்து அவிசுஒத்து இருந்தாய் சகலகலாவல்லியே!

பண்ணும் பரதமும் கல்வியும் தீஞ்சொல் பனுவலும் யான்
எண்ணும் பொழுது எளிதுஎய்த நல்காய்! எழுதா மறையும்
விண்ணும் புவியும் புனலும் கனலும் வெங்காலும் அன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்! சகலகலாவல்லியே!

பாட்டும் பொருளும் பொருளால்பொருந்தும் பயனும் என்பால்
கூட்டும்படி நின்கடைக்கண் நல்காய்! உளம்கொண்டு தொண்டர்
தீட்டும் கலைத்தமிழ்த் தீம்பால் அமுதம் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ஓதிமப் பேடே! சகலகலாவல்லியே!

சொல்விற்பனமும் அவதானமும் கவிசொல்லவல்ல
நல்வித்தையும் தந்து அடிமைகொள்வாய்! நளின் ஆசனம்சேர்
செல்விக்கு அரிதுஎன்று ஒருகாலமும் சிதையாமை நல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே! சகலகலாவல்லியே.

சொற்கும் பொருட்கும் உயிராம் மெய்ஞ்ஞானத்தின் தோற்றம்என்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார் நிலம்தோய் புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோடு அரசன்னம் நாண நடை
கற்கும் பதாம்புயத் தாயே! சகலகலா வல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னரும் என்
பண்கண்ட அளவில் பணியச் செய்வாய்! படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பல்கோடி உண்டேனும் விளம்பில் உன்போல்
கண்கண்ட தெய்வம் உளதோ? சகலகலாவல்லியே!.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலகலாவல்லிமாலை பிறந்த கதை

குமரகுருபரர் காசிக்குச்சென்று அங்கோர் மடத்தை நிறுவ முயன்றார். அதற்கான இடம் வேண்டும்: பொருளும் வேண்டும். அப்போது ஷாஜஹான் டில்லி ஆக்ராவில் முகலாய பாத்ஷாவாக இருந்தார். அவருடைய மூத்த மகனாகிய தாரா ஷிக்கோஹ் காசி உட்பட்ட பிரதேசங்களில் பாத்ஷாவின் பிரதிநிதியாக ஆளுனராக இருந்தார். அவரைப் பார்த்து தமக்கு வேண்டிய உதவியையும் அனுமதியையும் குமரகுருபரர் பெற வேண்டியிருந்தது. தாரா ஷிக்கோஹவுக்குத் தமிழ் தெரியாது. குமரகுருபரருக்கு ஹிந்துஸ்தானி தெரியாது தமக்குப் பன்மொழியாற்றல் வேண்டும் என்பதால் குமரகுருபரர் சரஸ்வதியை வேண்டி சகலகலாவல்லி மாலையைப் பாடினார். சரஸ்வதியின் அருளால் அவருக்குப் பன்மொழியாற்றல் ஏற்பட்டது.



தம்முடைய சித்த ஆற்றலால் ஒரு புலியை வசப்படுத்தி அதன் மீது அமர்ந்துகொண்டு தாரா ஷிக்கோஹ்வைக் காணச்சென்று அவருடன் ஹிந்துஸ்தானியிலேயே உரையாடினார். அவருடைய விருப்பத்தை அறிந்துகொண்ட தாரா ஷிக்கோஹ் மடம் கட்டிக்கொள்ள இடமும் தந்து பொருளும் கொடுத்து உதவினார்.

அக்கலாத்தில் முகலாய சாம்ராஜ்யத்தில் இந்துக்கள் கோயில் முதலானவற்றைக் கட்டுவதற்குத் தடைகள் இருந்தன. அதனால்தான் குமரகுருபரர் தாரா ஷிக்கோஹவிடம் விசேஷ அனுமதியையும் உதவியையும் பெறவேண்டியிருந்தது. காசியில் கட்டப்பட்ட அந்த மடம் காசிமடம் என்ற பெயரில் மிகவும் சிறந்து விளங்கியது.



# சோதனை

உலோகங்களில் மிகவும் தூய்மையானது தங்கம். அதுவே விலை மதிப்பிலும் உயர்ந்தது. அதை தான் நகை செய்வதற்காக நெருப்பில் போட்டு உருக்கி, சுத்தியால் தட்டி, நீட்டி, வளைத்துச் சரிப்படுத்துகிறார்கள். பயிர்களில் மிக இனிமையானது கரும்பு. அதைத்தான் நாம் நசுக்கி கசக்கி பிழிந்து சாறு எடுத்து காய்ச்சுகிறோம். நல்ல பொருள்களுக்கு எப்போதும் இப்படிப்பட்ட அனுபவம் உண்டாவது வழக்கம். ஆனால் அதனால் நன்மையே விளையும் என்று நாம் எடுத்துக் கொள்ளவேண்டும்.

பாண்டவர்கள் வாழ்க்கையில் மிகவும் சிரமப்பட்டார்கள். ஆனால் அதற்காக அவர்கள் சலித்துப்போகவில்லை. தாயின் சொற்படி நடந்து பகவான் கிருஷ்ணர் காட்டிய வழியை பின்பற்றி வாழ்க்கையை நடத்தினார்கள். தொடர்ந்த துன்பங்கள் வந்த போதும் நெறிவிட்டு மாறவில்லை. பீஷ்மர் குருஷேத்திரத்தில் அம்புகளின் மீது மரணப்படுக்கையில் இருந்த போது கண்ணீர் வடித்தார் "பிதாமகரே நீங்கள் ஏன் கண்ணீர் வடிக்கிறீர்கள் ?" என்று அர்சுனன் கேட்க "நல்லவர்களாகிய நீங்கள் (பாண்டவர்கள்) இதுவரை பட்ட சிறமங்கள் எல்லாம் என் மனத்திரையில் தெரிகிறது அதனால் தான் கண்ணீர் வடிக்கிறேன்" என்றார். "ஆனால் இன்னொன்று எனக்கு புரிகிறது, நல்லவர்களுக்கு ஆண்டவன் எப்போதும் துணை இருப்பான். பதவி ஆசையோ, பணத்தாசையோ இன்றி அவர்கள் வாழும்போது வாழ்க்கையின் நன்மைகளை ஆண்டவன் அவனாகவே முடிவில் கொண்டு வந்து கொடுப்பான். இதை நான் இவ்வேளையில் உணர்கிறேன்" என்றார் பீஷ்மர்.

பீஷ்மர் சொன்ன வார்த்தைகளை நாம் நம் மனதில் கொள்ளவேண்டும். நம்முடைய வாழ்க்கையில் ஆண்டவன் சோதனைகளை கொடுப்பது நம்முடைய மனத்தை பக்குவப்படுத்தி நல்ல பண்புகளை உண்டாக்குவதற்காகத்தான். அந்த முயற்சியில் நாம் கடவுளை நோக்கி ஓர் அடி எடுத்து நடந்தால் அவர் பத்து அடிகள் வைத்து நம்மை நோக்கி வருவார். இதனை நாம் நாயன்மார்கள், ஆழ்வார்கள் கதைகள் மூலம் அறியக்கூடியதாகவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## CONTACT No . HINDU TEMPLES & MISSIONS

**Arulmigu Sri Gnanabairavar Swamy Thevasthanam**
42, Dewass Ln, Grandpass
Colombo 14. Tel : 2423895

**Arunachaleswara Kovil Mattakkuliya**
Colombo 15. Tel : 2524261

**Chinmaya Mission of Sri Lanka**
32 ,10th Lane
Colombo 03. Tel : 2591344

**Colombo North Hindu Paripalana Sangam**
40A, Temple Rd,
Colombo 15. Tel : 2524308

**Illangai Mahakaliamman Kovil**
38/35, Rathnam Road,
Colombo 13. Tel : 2386998

**Kalikovil**
70, Temple Rd, Mutwal
Colombo 15. Tel : 2527406

**Kathiresan Kalyana Mani Mandapam**
109, Sri Kathiresan St,
Colombo 13 Tel : 2478539

**Krishnan Kovil**
72, Brass Founder St,
Colombo 13 Tel : 2334904

**Mounashram Trust**
19, International Buddhist Centre Rd,
Colombo 06. Tel : 2360608

**Old Kathiresan Temple**
123, Galle Rd,
Colombo 04. Tel : 2599431

**Raja Rajeswary Temple**
94/4, Vivekananda Hill
Colombo 13. Tel : 2344009

**Ramakrishna Mission**
40, Ramakrishna Rd,
Colombo 06. Tel : 2361438 / 2588253

**Saiva Mangaiyar Kalagam**
23, Rudra Mw,
Colombo 06. Tel : 2504225

**Sammangodu Sri Manickavinayagar Kovil**
49, Lawrence Road,
Colombo 04 Tel : 2559184

**Seetharama**
16 2/5 Suvisudharama Road,
Colombo 06. Tel : 2365347

**Sithi Vinayagar Kovil**
59, Maligawatte Road,
Colombo 10. Tel : 2424225

**Sivasubramania Swamy Kovil**
107/9 Bandaranayake Mawatha,
Colombo 12. Tel : 2391095

**Sri Anjaneyar Temple Trust**
3/11 Bodhirukkarama Road, Kalubowila,
Dehiwala. Tel : 2726444

**Sri Battrakaligambal Thevasthanam**
61, New Kelani Bridge Rd, Nawagampura,
Colombo 14. Tel : 2544512

**Sri Devi Karumariamman Temple**
158, Sri Kathiresan St
Colombo 13. Tel : 2472567

**Sri Durkai Amman Temple**
86/10 Silversmith Ln,
Colombo 12. Tel : 2440351

**Sri Gnana Virawar Muniyandi Sawamy Kovil**
22, Galpotta St,
Colombo 13 Tel : 2387626

**Sri Kailasanatha Swamy Devasthanam**
11/15, Captains Gdn,
Colombo 10 Tel : 2687110

**Sri Kandasamy Kovil**
Galle Road, Panadura
Tel : (038) 2234848

**Sri Kathiravelautha Swamy Temple**
91/1 Main St ,
Colombo 11 Tel : 2433627

**Department of Hindu Religious and Cultural Affairs**
248 1/1, Galle Road,
Colombo 04. Tel : 2552643

**Sri Kathiravelayuthasamy Temple Yalpana**
103, Chekku St,
Colombo 13. Tel : 2432952

**Sri Kathiravellautha Swamy Temple**
359, Galle Rd,
Colombo 04. Tel : 2583315

**Sri Kathiravelaudha Swamy Kovil**
105, Thondara Sabai Old Rd
Kaluthara Tel : (034)2223973

**Sri Mahakaliambal Kovil**
680, Bloemendhal Rd,
Colombo 15. Tel : 2526998

**Sri Muththu Mariamman Devasthanam**
Kovil Rd, Bulathsinghala.
Tel : (034) 2282404

**Sri Muthu Kumaran Temple**
614, Station Rd, Hunupitiya,
Wattala Tel : 2942206

**Sri Mari Amman Kathirvelautha Suwamy Kovil**
104, Sea Street,
Negombo Tel : (031) 3710536

**Sri Muthumariamman Kovil**
53, Kotahena St,
Colombo 13. Tel : 2432618

**Sri Muthuvinayagar Sawami Kovil**
221, Sea St,
Colombo 11. Tel : 2435154

**Sri Ponnambalavaneswarar Kovil**
38, Sri Ramanathan Rd,
Colombo 13. Tel : 2431252

**Sri Poopala Venayagar Kovil**
212, Kandy Road,
Peliyagooda Tel : 2912479

**Sri RadhaKrishna Temple**
188, New Chetty St,
Colombo 13. Tel : 2471099

**Sri Siddhi Vinayakar Temple**
70, Temple Road,
Colombo 15. Tel : 2522236

**Sri Siddivinayakar Devasthanaim**
30/24, St Anthonys Mw,
Colombo 13. Tel : 2433468

Sri Singamahakali Temple
153, Sea St ,
Negombo Tel : (031) 3314116

**Sri Sithy Vinayagar Temple**
169/7 Sea Street ,
Negombo. Tel : (031)2238117

**Sri Siva Subramania Sawami Kovil**
131, Kew Road,
Colombo 02. Tel : 2432225

**Sri Siva Subramaniya Sawami Kovil**
98, Ginthupitiya St,
Colombo 13. Tel : 2421064

**Sri Sivaraja Vinayagar Temple**
99,Ginthupitiya St,
Colombo 13. Tel : 2341364

**Sri Ukra Veera Maha Kaliamman Kovil**
332, Sea St,
Colombo 11. Tel : 2388596

**Sri Varatharajah Vinayagar Temple**
105, Kotahena St,
Colombo 13 Tel : 2336555 / 2471545

**Sri Veer Maha Kaliamman Temple**
36, Sri Ramanathan Rd,
Colombo 13 Tel : 2431833

**Sri Vekkali Amman Kovil**
112/18, Jampettah St
Colombo 13. Tel : 2451104

**Sri Venkateshwara Vishnu Kovil**
98/10 , Temple Rd, Mutwal
Colombo 15. Tel : 2526979

**Sribala SelvaVinayaga Moorthi Kovil**
Gardens Bldg,
Colombo 10. Tel : 2687111

**Srimaha Kaliamman Thirukovil**
59, Armour St,
Colombo 12. Tel : 2321372

**Youth League For Sanathana Dhamic Perception**
3 Ridgeway place,
Colombo 04. Tel : 2554759.

**Torrington Sri Murugan Kovil**
63, Torrington Avenue,
Colombo Tel : 0725172247

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

flex Wellawatte Guide

இலவசமாக!
வெள்ளவத்தையில் இல்லங்கள் தோறும்
இதழினை எதிர்பாருங்கள்
தொடர்புகளுக்கு: 0777555026

# SEPTEMBER 2011

| SUN | MON | TUE | WED | THU | FRI | SAT |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 ● + ■ * | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | |

## AUGUST

| SUN | MON | TUE | WED | THU | FRI | SAT |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 ● + ■ * |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 + * | | | |

## OCTOBER

| SUN | MON | TUE | WED | THU | FRI | SAT |
|---|---|---|---|---|---|---|
| 30 | 31 | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 ● + ■ * | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 + * | 27 | 28 | 29 |

● Poya Day * Public Holiday + Mercantile Holiday ■ Bank Holiday

நீங்கள் படித்துச் சுவைத்த தரமான இந்து மத சம்பந்தமான தகவல்களையும், இலங்கையில் அமைந்துள்ள கோயில்கள் பற்றிய தகவல்களையும் எமக்கு எழுதியனுப்பினால் சிறந்ததை நாம் பிரசுரிப்போம்.

**Flex Publications**
(A Subsidiary of **Flex Graphic**)
04, IBC. Road, Wellawatte.
Tel:- 2364157, 2506114 Fax:- 2501766
www.flexgraphic.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









HELP them for their Better Life



# கோகுலம்

## பக்தி வேதாந்த சிறுவர் இல்லம்

இல 607A, நீர்கொழும்பு வீதி, மாபொல, வத்தளை
தொலைபேசி: 2948398

கோகுலம் சிறுவர் இல்லமானது 115 பிள்ளைகளுடன் இல.607A, நீர்கொழும்பு வீதி, மாபொல, வத்தளையில் ஆதரவற்ற குழந்தைகளை அரவணைக்கும் கருணை இல்லமாக இயங்கிவருகின்றது.

இங்கு உணவு, உடை, உறைவிடம் வைத்திய வசதிகள் உட்பட சகலவசதிகளும் செய்து கொடுக்கப்படுகின்றன. அவர்களுக்கு கல்வி பயில அத்துடன் இணைந்த பாடசாலையும் உள்ளது. அவர்களுக்கு தாங்களும் தங்களால் இயன்ற அளவு உதவிசெய்து பகவான் அருள் பெற வேண்டுகின்றோம்.

தற்போதைய சூழ்நிலையில் அவர்களைப் பராமரிக்க ஒரு நாளைக்கு ரூபா.25000/= செலவாகின்றது.



தங்கள் நன்கொடைகளை பிறந்ததினம், திருமணவருடப்பூர்த்தி மற்றும் உறவினர்களின் ஞாபகர்த்தமாகவோ வழங்கி உதவலாம்.

**GOKULAM**

OFF: இல.188, புதுச்செட்டித்தெரு, கொழும்பு-13.
No.188, New Chetty Street, Colombo 13.
Tel:**2433325**, Web: www.gokulam.org Email: **iskcon@slt.lk**

**A/C NAME: ISKCON, A/C NO:1050669901 BANK: COMMERCIAL BANK, KOTAHENA BRANCH**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Published by Flex Publications, 4, IBC Road, Wellawatte. Tel: 0777 614 186

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org